# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 04 திங்கட்கிழமை (20-07-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 200


# தொலைத்தொடர்பு நிலையபகுதியில் சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்தன

## இரு பொலிஸார் காயம் நித்தம்புவவில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 20

கம்பஹா மாவட்டத்தில் நித்தம்புவவில் அமைந்துள்ள ''மொபிட்டெல்'' தொலை பேசி பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகில் நேற்று அதிகாலை இரு அதி சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன.

குண்டுகள் வெடிப்பில் நித்தம்புவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட இரு பொலீஸார் காயமடைந்தனர்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்று அதிகாலை 4 மணிக்கு தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகில் குண்டு ஒன்று வெடித்தது.

இதனால் தொலைத் தொடர்புக் கோபுரமும், பரிவர்த்தனை நிலையமும் சேதமடைந்தன.

இச்சம்பவத்தை அறிந்து விசாரணைகள்மேற்கொள்ள நித்தம்புவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிகால் கப்புப்கொட தலைமையில் 45 பொலீஸார் நேற்றுக் காலை 6-45 மணிக்கு அங்கு சென்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலின்பின்னணியில் பாதாள உலகக் கும்பல்?

கொழும்பு, ஜூலை 20

தெற்கில் தொலைத் தொடர்பு கோபுரம், மின்மாற்றிகள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு பாதாள உலக குற்றவாளிகள் குழுவே பொறுப்பாக இருப்பதாக பொலீஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் தெற்கில் தொடரும் தாக்குதல்கள் குறித்து பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும்—

இத்தாக்குதல்களுக்கு பாதாள உலக குற்றவாளிகள் குழு ஒன்றே பொறுப்பாக இருப்பதாகச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (இ-3-9)



அப்ப பிரசாரத்தைக் கைவிட்டு போராட்டத்தில் இறங்கப்போறார் போல ரணில்...!

## கைதானார்

கொழும்பு, ஜூலை 20

இந்து விவகார திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். தெய்வநாயகம் கொழும்பில் உள்ள அவரது திணைக்களத்தில் வைத்து இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-21)

## 2 இலங்கைத் தமிழர்கள் கோயம்புத்தூரில் கைது!

சென்னை, ஜூலை 20

தமிழீழ விடுதலை இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் இரு இலங்கைத் தமிழர்கள் நேற்று முன்தினம் கோயம்புத்தூரில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்கத் தயாரிப்பான கைத்துப்பாக்கி ஒன்றும், அதற்கான இரண்டு சுற்று ரவைகளும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மூன்று நாள்களுக்கு முன்னர் கோயம்புத்தூர் நகரில் கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிளில் இந்த இளைஞர்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அனுராவை சேர்க்கும் முயற்சி தொடர்கிறது

கொழும்பு, ஜூலை 20

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்காவைப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைக்கும் முயற்சி தொடர்வதாக இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள ஹரி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க குடும்பத்துடன் நெருங்கிய நண்பரான ஹரி ஜெயவர்த்தன இது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் —

பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வெற்றிஉறுதி படையினர் நகர்வு மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 20

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மாங்குளம் நகரைக் கைப்பற்றும் தமது நகர்வை நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பித்துள்ளனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மாங்குளத்துக்கு மேற்கே இந்த நகர்வைப் படையினர் ஆரம்பித்தனர் என்றும் —

நேற்று முன்தினம் இடம்பெற்ற சண்டையில் மூன்று விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும் —

இரு படையினர் காயம் அடைந்தனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கையை ஐ.தே.க. நிறுத்தியது

கொழும்பு, ஜூலை 20

மாகாண சபைத் தேர்தல்களுக்கான பிரசார பணிகள் அனைத்தையும் ஐ.தே.க. நிறுத்தி விட்டதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'தேர்தலைப் பிற்போட அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளதையடுத்து தேர்தல் பிரசார வேலைகளை நாம் நிறுத்தியுள்ளோம்'. என்று அவர் கூறினார்.

அதேசமயம் — தேர்தலை ஒத்திவைப்பதற்கான அறிவிப்பை அரசாங்கம் சார்க் மாநாட்டின் பின்பே வெளியிடும் என ஒரு தகவல் தெரிவிப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் கூறின. (இ-3)

## தேர்தல் நடத்தப்பட்டால் அனுருத்த விலகிவிடுவார்

கொழும்பு, ஜூலை 20

'மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தும் திட்டத்தை அரசு முன்னெடுக்குமானால் யுத்தம் தொடர்பான பொறுப்புக்களில் இருந்து நான் விலகிக் கொள்வேன்.'

மேற்கண்டவாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

தேர்தல் பணிக்காக யுத்த முனையில் இருந்து படைகளை வாபஸ்பெற்றால் அது விடுதலைப்புலிகள் தங்களைப் பலப்படுத்த அவகாசத்தை வழங்கிவிடும் என்றும் அவர் கூறினார்.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் திட்டத்தை அரசு முன்னெடுத்தால் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள போர் முனையில் இருந்து படைகளை வாபஸ் பெறவேண்டியிருக்கும்.

விடுதலைப் புலிகள் இதனையே விரும்புகின்றனர்.

தேர்தல் நடத்தப்படுவதால் இராணுவ நடவடிக்கையில் ஏற்படும் தளர்வுகள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிவாவின் 75 ஆவது பிறந்த நாள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரத்தின் 75 ஆவது பிறந்த நாள் இன்று யாழ். மாவட்ட கூட்டணி அலுவலகத்தில் அமைதியாகக் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

காலை 11 மணி முதல் நடைபெறும் இந்த வைபவத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தைகளை அணைத்து தீக்குளித்தார் தாயார்!

### சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி, ஜூலை 20

இளம் குடும்பப்பெண் ஒருவர் தனது இரு குழந்தைகளையும் அணைத்துக்கொண்டு மண்ணெண்ணெய் ஊற்றித் தீமூட்டிக்கொண்டதில் அந்த இளம் பெண் உடல் கருகி அதே இடத்தில் மரணமானார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் குழந்தைகளில் ஒன்று மரணமானது. மற்றைய குழந்தை ஆபத்தான நிலையில் ருந்து வருகிறது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி வடக்கில் இடம்பெற்றது.

கணவனுக்கு உணவு சமைத்து வைத்த பின்னர் பிள்ளைகள் இருவருக்கும் புது உடை அணிவித்து தானும் கூறைச் சேலை அணிந்து கொண்டு பிள்ளைகள் மீதும் தன் மீதும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைபடை அங்கிகள் குறித்து மேலும் தகவல்

கொழும்பு, ஜூலை 20

கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியில் ஒரு வீட்டில் இருந்து கடந்த வாரம் கைப்பற்றப்பட்ட தற்கொலைப் படை அங்கிகள் மூன்று வருடங்களுக்கு முன்பே அங்கே கொண்டு வரப்பட்டிருந்தன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த அங்கிகள் அங்கு ஒளித்து வைக்கப்பட்டிருந்தன என்றும்—

அங்கு வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடத்தப்பட்டதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## Methodist Vocational Training Centre

Electronic Course

begins on Wednesday the 22nd July 1998 at 9-30 .am. (S.L.T)

All those who registered and new entrents are welcome.

= The Manager

161,163,165, Main Street,
Jaffna.

(C/4326)



உ

## வில்லூன்றி புனித தீர்த்தம்
## ஆடி அமாவாசை விழா

காலம்; 23 - 07 - 1998 வியாழக்கிழமை

★ தீர்த்தோற்சவம் ★

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை

காலை 8.00 மணி வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்த வாரி.

காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரை வில்லூன்றி விநாயகர் புனித தீர்த்தக் கட்டடத்தில் வீற்றிருந்து பக்த அனுக்கிரகம்.

காலை 10.00 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்

★ தர்ப்பணம் ★

காலை 8-15 மணிக்கு தீர்த்தவாரி நடைபெற்றவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து, தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பு:- நேரங்கள் இலங்கையின் பழைய நேரம்.

தர்மபரிபாலன சபை,
வில்லூன்றி தேவஸ்தானம்,
பரிபாலன சபை,
வில்லூன்றி புனித தீர்த்தம்.

வில்லூன்றி.
20-07-98.

(57711)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன்

பாஸ்கரனின்

அன்புச் சகோதரி

### சிவஞானம் சதீஷா

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். சகோதரியின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கோண்டாவில் வாழ் நண்பர்கள்.

(57715)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 — 08 — 1928 | 30 — 07 — 1997 |

திருமதி

### சுப்பிரமணியம் பூரணம்

(ஓய்வுபெற்ற முன்னாள் ஊழியர் அரச வைத்தியசாலை)

திதி: 20-07-1998

அன்பாலே எம்மை வளர்த்த அன்னையே!
ஆதரவாய் எம்மை அணைத்த மாமியே!
இன்னலிலும் சீராட்டிய பாட்டியே!
ஊரினிலே சிறப்பாக வாழ்ந்தாயே!
ஏன் எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றீர்?
உம்மை உலகுள்ளவரை மறவோமே!

மக்கள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

16/4, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(57709)

## தரமற்ற அரிசி

ஆனைக்கோட்டைப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் நிவாரணத்துக்கு தரமற்ற அரிசி விநியோகிக்கப்பட்டு வருவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது. (இ-139)


## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

மம்முட்டி - அஞ்சு கோசி, மஞ்சுளா விஷ்ணுவரதன் நடித்த

**சத்ரிய வம்சம்**

அடுத்த வெளியீடு!

**இந்தியன்**

தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4222)



## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று மட்டும்

விஜயகாந்த் - ப்ரிதா ஆகியோர் நடித்த

**தர்மா**

செவ்வாய், புதன்

பிரபுதேவா, சரத்குமார் ரோஜா, மனோரமா நடித்த

**இந்து**

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)

Tele. No: 070 - 212223

(57502)



## நாகம்ஸ்

சினிமா

சுன்னாகம்.

அகல வெண் திரையில் ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

சுப்ப ஸ்டார் ரஜனி மீனா - செந்தில், வடிவேல் நடித்த

**முத்து**

(சினிமாஸ்கோப்)

காட்சிகள்:- 10-30, 2-30

(57712)



## A/L 2000
## இணைந்த கணிதம்

பகுதி

நுண் கணிதம்

**A. பத்மநாதன்**

ஆரம்பம்:- 20-07-98
திங்கள் பி. ப. 3-30

**நிரு**

கோண்டாவில்.

(55454)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை

வைத்திய கலாநிதி

சி. இராசரத்தினம்,

121, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ். நகர்
யாழ்ப்பாணம்.

(57710)


## மாணவர்களிடையே தையல், கோலப்போட்டி

வலிகாமம் தெற்கு, ஜூலை 20

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே தையல், கோலம் போடுதல், செயற்கைப் பூக்கள் தயாரித்தல் போட்டிகள் கோட்ட ரீதியாக நடத்தப்பட உள்ளன.

இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மனைப் பொருளியல் பாட சேவைக்கால பயிற்சி ஆசிரியர் மேற்கொண்டு வருகிறார்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பாடசாலை ரீதியாகக் கோரப்பட்டுள்ளன.

ஆண்டு 3 இல் இருந்து ஆண்டு 13 வரையான பாடசாலை மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

இப்போட்டியில் ஆண்டு 3-6 வரை ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தோற்றலாம். 7-8 ஆண்டுகளில் யாராவது இரண்டு பேர் பங்கு பற்றலாம். 9-10 ஆண்டுகளில் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் தனித்தனியாக ஒவ்வொரு பெண்ணும் 12-13 ஆண்டுகளில் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் இருவரும் பங்கு பற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய்க் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் ஓகஸ்ட் முதலாம் திகதி கோப்பாய் மகா வித்தியாலயத்திலும் — உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் ஓகஸ்ட் 2 ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும். (ஐ-152)

## மலத்தியோன் விநியோகம்

நீண்டகாலத்தின் பின்னர் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரினால், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருக்கு மலத்தியோன் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

வடமராட்சி கிழக்கிலுள்ள, நாகர் கோயில், அம்பன், மருதங்கேணிப் பகுதிகளுக்கும், கடந்த செவ்வாய்க்கிழமை மலத்தியோன் வழங்கப்பட்டது.

(ஐ-8-109)

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம!

## வாழ்த்துகின்றோம்

கலைஞர்களுக்கான கலாபூஷண விருதுபெறும்
கலாவித்தகர் - மிருதங்க வித்துவான்

**திரு. பண்டாரம் சின்னராசா அவர்களை**

மனமார வாழ்த்தி தொடர்ந்து தமது சேவையை கலையுலகுக்கு ஆற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீ காமாட்சித்தாயைப் பணிந்து வேண்டுகின்றோம்.

நாச்சிமார் கோயிலடி மாணவர்களும்
அ. ஜெயராமன் (வயலின்) குடும்பத்தினரும்
இ. கணேசராசா குடும்பத்தினரும்

நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (சி/4327)

## திருமதி செல்லத்துரை சிவபாக்கியம்

காரைநகர் பலு ஆடுவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லத்துரை சிவபாக்கியம் 19-7-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், ஜெயவீரசிங்கம் (J. T. ஸ்ரோர்ஸ் —எட்டியாந்தோட்ட), இந்திராவதி, புஸ்பாதேவி, வசந்தாதேவி, மகேந்திரராஜா (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகராசா, ஈஸ்வரி, உருத்திரகுமார், சுந்தரலிங்கம், நிர்மலாதேவி ஆகியோரின் மாமியாரும், ஜெயந்தி, ஜெயராஜா, ஜெயரஞ்சன், ஜெயப்பிரகாஷ், ஜெயக்குமார், ஞானகுமார், சிவகுமார், சிவலக்சி, சிவகுமாரி, காலஞ்சென்ற இராசகுமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20-7-98 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. தியாகராஜா
(மருமகன்)

சத்தியக்காட்டுச் சந்தையடி,
சுழிபுரம்.

(67714)

திருமதி

## செல்லம்மா கந்தையா

காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவி செல்லம்மா 17 - 07 - 98 அன்று காலமானார்.

இவர் கமலாதேவி, கமலராஜா, விமலாதேவி (France), அமிர்தராஜா (America), ருத்திரா (America), பாஸ்கரன் (America), கலாரஞ்சினி, நிர்மலா ஆகியோரின் பாசமிகுந்த தாயாரும், சி. இராஜசிங்கம், க. இசபெல்லா மாஜினி (ஜெனோ), பூ. தேவராசா (France), அ. மங்களாதேவி (America), ரு. ஜெயந்தி (America), பா. யோகாதேவி (America), க. ஜெயராசா, சி. துரைசிங்கம் ஆகியோரின் மாமியாரும், திரு. இராசையா, காலஞ்சென்றவர்களான பூவிலிங்கம், சிவராசா மற்றும் பாக்கியம், யோகம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும், தர்ஷிகா, நிலோஜன் (Holland), பியோறிலோஜன், வேளாடியோனி, பார்த்திபன் (France), கார்த்திகா (France), றமோனா, ருஷாந்தி, அனோஜன், ஜொனதன் (நால்வரும் (America) மற்றும் ஜெகதீஸ்வரன், துர்ஷன், மதீஷன், துஷந்தி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பிள்ளைகள்

128, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.

(57707)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஷ்யாவின் கடைசி சார்மன்னர் இரண்டாவது நிக்கலஸினதும், அவரது குடும்பத்தினரதும் எலும்புகள் அடங்கிய பேழைகள் நல்லடக்கத்துக்காக சமஷ்டி படை வீரர்களால் சென் பீற்றர்ஸ்பேர்க்கிற்கு எடுத்து வரப்பட்ட காட்சி. (ஐ)
[படம் ஏ.எப்.பி]

# கடைசி சார் மன்னரின் எலும்புகள் சென்.பீற்றர்ஸ் பேர்க்கில் நல்லடக்கம்!

## உணர்வு பூர்வ வைபவத்தில் அதிபர் யெல்ட்சின்!

சென்.பீற்றர்ஸ்பேர்க் ஜூலை 20

ரஷ்ய சாம்ராஜ்ஜியத்தின் கடைசி சார் ( CZAR ) மன்னரான இரண்டாவது நிக்கலஸினதும் ( NICHOLAS – II ) அவரது மனைவி அலெக்சான்ரா ( ALEXANDRA ). அவர்களது மூன்று புதல்விகள், மற்றும், நான்கு பணியாளர்களின் எலும்புகள் அடங்கிய பேழைகள் கடந்த வெள்ளியன்று சென். பீற்றர்ஸ் பேர்க்கில் உள்ள ஒத்தடொக்ஸ் தேவாலயத்தில் நடந்த உணர்வு பூர்வ ஆராதனையின் பின் நல்லடக்கஞ் செய்யப்பட்டன.

இரண்டாவது நிக்கலஸின் உறவினர்கள், 50 நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள், உலகின் முக்கிய அரச பரம்பரையினரின் பிரதி நிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்ட இறுதி ஆராதனையில் ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினும் கலந்து கொண்டார்.

முன்னதாக யக்கரறின்பேர்க்கில் இருந்து எலும்புகள் அடங்கிய சிறிய பேழைகள் பொலீஸ் மோட்டார் பவனியாக கடந்த புதனன்று சென். பீற்றர்ஸ்பேர்க்கிற்கு எடுத்து வரப்பட்டன. ஆயிரக் கணக்கான ரஷ்யர்கள் வீதியோரங்களில் குழுமி நின்று அந்த பவனியைப் பார்வையிட்டனர்.

சார் மன்னரும், அவரது குடும்பத்தினரும் 1917 ஆம் ஆண்டு போல்ஷிவிக் புரட்சியின் போது கம்யூனிஸ்டுக்களால் சுடடுக் கொல்லப்பட்டு அடையாளந் தெரியாத இடத்தில் புதைக்கப்பட்டனர். பின்னர் கடந்த 1991 ஆம் ஆண்டு அவர்களுடையவை எனச் சந்தேகிக்கப்பட்ட எலும்புத் தொகுதிகள் வனப் பகுதி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டன.

அந்த எலும்புகள் சார் குடும்பத்தினரதுதான் என சர்வதேச தடயவியல் நிபுணர்கள் நிரூபித்ததை அடுத்து — கொலை செய்யப்பட்டு 80 ஆண்டுகளின் பின் — பூரண மரியாதைகளுடன் அவர்களது இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று தெரிவித்து வந்த அதிபர் பொறிஸ் யெல்ட்சின் இறுதிச் சடங்குகளுக்கு ஒருநாள் முன்னதாகத் தனது முடிவைத் திடீரென மாற்றிக்கொண்டது பலருக்கும் வியப்பை அளித்துள்ளது.

"சார் குடும்பத்துக்கு நேர்ந்தது ரஷ்ய வரலாற்றில் வெட்கப்படவேண்டிய அத்தியாயங்கள்" என்று இறுதி ஆராதனையின் பின் உரையாற்றுகையில் யெல்ட்சின் கூறினார்.

(ஐ)

# இயற்கையின் சீற்றத்தினால் பப்புவா நியூகினியில் பேரழிவு

## ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மரணம்!

போர்ட் மொரெஸ்பி, ஜூலை 20

பசுபிக்தீவான பப்புவா நியூகினி நாட்டின் வடமேற்குக் கரைப்பகுதியை கடும் நில நடுக்கம், சூறாவளி, பெரும் கடற்கொந்தளிப்பு என்பன ஒரே சமயத்தில் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன.

மிக மோசமான இந்த இயற்கையின் சீற்றத்தினால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர். பல கிராமங்கள் நீரில் அள்ளுண்டன.

நேற்று முன்தினம் இரவு நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடும் சூறாவளியும், கடற் பெருக்கும் கரையோரக் கிராமங்களைத் தாக்கின. தாழ்ந்த பகுதிகளில் அமைந்திருந்த பல கிராமங்களை கடல் அலை அடித்துச் சென்றது. திடீரென வீடுகளுக்குள் புகுந்த வெள்ளத்தில் பலர் மூழ்கினர். ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை விட்டுத் தப்பியோடினர்.

நூற்றுக் கணக்கானோரின் சடலங்களும், வீடுகளின் இடிபாடுகளும் நீரில் மிதப்பதாக ஹெலிக்கொப்ரர்களில் இருந்த மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். அவற்றில் பெரும்பாலானவை குழந்தைகளின் சடலங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. முதலில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7 புள்ளிகள் பதிவானதாக ஆஸ்திரேலிய ஆய்வாளர்கள் தெரிவித்தனர். மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த அனர்த்தத்தில் உயிரிழந்து விட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட பேரழிவு என ஆஸ்திரேலிய நிபுணர்கள் இதனை வர்ணித்துள்ளனர்.

(ஐ-6)

## உலகம் அழிகிறதோ எனப் பயந்தோர்!

### கிராம வாசிகள் விவரிப்பு

போர்ட் மொரெஸ்பி, ஜூலை 20

"இரவு வேளை சிறிது நேரம் பெரும் சுவரைப் போல எழுந்து வந்த அலைகளைக் கண்டு உலகமே அழிகிறதோ எனப் பயந்தோம்."

இயற்கையின் சீற்றத்தில் உயிர் தப்பிய பப்புவா நியூகினி கிராமவாசிகள் இவ்வாறு விவரித்துள்ளனர்,

பல பகுதிகளிலும் கடலலை 10 மீற்றருக்கும் உயரத்துக்கு மேலெழுந்து கிராமங்களுக்குள் புகுந்ததாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். (ஐ-6)

## 30 அடி உயரத்துக்கு அலைகள் சீறி எழும்பின!

போர்ட் மொரெஸ்பி, ஜூலை 20

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் கடல் அலைகள் குறைந்தது 30 அடி உயரத்துக்கு சீறி எழுந்து வந்தன என்று உள்ளூர் கத்தோலிக்க மதகுரு ஒருவர் தெரிவித்தார்.

கிறைட்றோப் என்ற தீவில் இருந்த எல்லா வீடுகளும், தேவாலயம், வானொலி நிலையம் என்பனவும் முற்றாக அழிக்கப்பட்டன.

இந்தோனேசியாவின் இரியன் ஜயா மாகாணத்தின் அருகே அமைந்த பப்புவா நியூகினியின் வடமேற்குப் பகுதியிலேயே பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க பல நாள்கள் பிடிக்கும் என மீட்புப் பணியாளர்கள் கூறியுள்ளனர்.

(ஐ-6)

## மண்டேலாவைகௌரவித்து

## 3 ஆயிரம் பேருக்கு இலவச சிகையலங்கரிப்பு!

புதுடில்லி, ஜூலை 20

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தமது 80 ஆவது பிறந்ததினத்தைக் கடந்த சனியன்று கொண்டாடினார் அல்லவா? அவர்மீது பற்றும், மரியாதையுங் கொண்ட இந்தியர் ஒருவர் அவரது பிறந்த தினத்தைப் புதுவிதமாகக் கொண்டாடுகிறார்.

பெங்களூரைச் சேர்ந்த சிகை அலங்கரிப்பாளரான அந்த நபர் பெரியவர்கள், சிறியவர்கள் உட்பட 3 ஆயிரம் பேருக்கு இலவசமாக முடி வெட்டி விடத் தீர்மானித்துள்ளார்.

முடி அலங்கரிக்கும் வேறு நூறு பேருடன் இணைந்து இந்த இலவச சேவையை அவர் வழங்கி வருகிறார்.

அண்ணல் காந்திக்கு இணையாக மண்டேலாவை போற்றி மதிப்பதாக அவர் தெரிவித்தார். (ஐ-6)

## ஈராக்கிய புரட்சியின் 30 ஆண்டு நிறைவு



பக்தாத், ஜூலை 20

புரட்சியைத் தொடர்ந்து 'பாத்' கட்சி ஆட்சி அதிகாரத்துக்கு வந்து 30 ஆண்டுகள் நிறைவு பெறுவதை ஒட்டிய கொண்டாட்டங்கள் ஈராக்கில் நடைபெற்று வருகின்றன. பக்தாத் நகரில் அமைக்கப்பட்டுள்ள அதிபர் சதாம் ஹுசேய்னின் பிரமாண்டமான 'கட் – அவுட்' ஒன்றைத்தாண்டிச் செல்லும் ஒரு வாகனத்தில் அவரது ஆதரவாளர்கள் கோஷங்களை எழுப்பியவாறு செல்கின்றனர். (ஐ)

## ஆஸி. விமானங்கள் நிவாரணப் பணி

பெரும் கடற்கொந்தளிப்பால் பேரழிவைச் சந்தித்துள்ள பப்புவா நியூகினியின் வடமேற்குப் பகுதியில் அவசர நிவாரணப்பணி ஆஸ்திரேலியா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலிய விமானங்கள் ஆகாய வழியாக உணவுப் பொருள்களையும், குடி தண்ணீரையும் விநியோகித்து வருகின்றன.

உலக நாடுகள் பலவும் உணவு மருந்து உதவிகளை வழங்கி வருகின்றன. காயமடைந்தவர்களால் நிரம்பி வழியும் ஆஸ்பத்திரிகளில் மருந்துத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ஐ-6)

உலக அரங்கில்

## குழந்தைகளின் அறிவுவளர இசை

நியூயோர்க், ஜூலை 20

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் சிறு குழந்தைகளின் அறிவை இசை மூலம் வளர்க்க ஏதுவாக அந்தக் குழந்தைகளின் தாய்மாருக்கு சாஸ்திரிய இசை பதிவு செய்யப்பட்ட கொம்பக்ஸ் இசைத் தட்டுக்களையும் (சீ.டி) ஒலிப்பதிவுக் கஸட்டுக்களையும் வழங்குவது என்று அந்த மாநில அரசு முடிவு செய்துள்ளது.

ஒரு குழந்தை இசையைக் கேட்கும் போது அதன் மூளையில் உள்ள கோடிக் கணக்கான உயிர் அணுக்கள் பெருகுகின்றன என்ற கூற்றை பல்வேறு ஆய்வுகள் ஊர்ஜிதம் செய்கின்றன என்று ஜோர்ஜியா மாநில ஆளுநர் சென்மில்லர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

(ஐ-6)

## சர்வதேச போர் குற்ற நீதிமன்றம்

சர்வதேச போர் குற்ற விசாரணை நீதிமன்றத்தை அமைப்பதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தில் ஐ. நா தலைமைச் செயலாளர் கோபி அனான் நேற்று முன்தினம் றோமில் கையெழுத்திட்டார்.

120 நாடுகளிடையே நடத்தப்பட்ட தீவிரப் பேச்சு வார்த்தைகளை அடுத்து இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

சொந்தப்பாவிப்பில் உள்ள ஜப்பான் குவாட்டா ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. தம்பித்துரை, 299, அரசடி வீதி, நல்லூர். (பார் அருகில்) யாழ்ப்பாணம்.

[57663]

வீட்டுப்பாவனைக்குரிய பொருள்களும், தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. புதன், வியாழக்கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம். பி. ப. 4.30 இலிருந்து 6.00 மணிவரை. 42, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[57693]

### வீணை விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள வீணை விற்பனைக்கு உண்டு. 214/5, இராமநாதன்வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

[57691]

### தவறிவிட்டது

இல. 138/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ப. பூரணம் ஆகிய எனது மருத்துவக் குறிப்புகள் அடங்கிய கொப்பியை நாவலர் வீதிக்கும், அத்தியடி புது வீதிக்கும் இடையில் தவறவிட்டுள்ளேன். தயவு செய்து கண்டெடுத்தவர்கள் இல. 138/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்,

[57690]

### கடைவாடகைக்கு

இருகடைகள் வாடகைக்கு விடப்படும். தாவடிச்சந்தி, K. K. S. றோட் சந்தியில் மேற்குப் பக்கமாக உள்ள கடையும் வாடகைக்கு விடப்படும். தொடர்பு: மகேஸ் சில்லறைக்கடை, மனோகராச் சந்தி, K. K. S. Road, யாழ்ப்பாணம்.

(57708)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். A. M. T. ஸ்ரோர்ஸ், தபாற் கட்டைச்சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். [57673]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் அராலியூர் சுந்தரம்பிள்ளை வீரசேகரி யில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் வாசித்தனர். நீங்களும் வாசியுங்கள். அவர்களுக்கும் அனுப்புங்கள். ரூபா 50. [57705]

### கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இன கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. A. அருளானந்தம், இல. 588/8, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் (ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை) நண்பகல் 12 மணியில் இருந்து பார்வையிடலாம்.

[57681]

### மண்ணெண்ணெய் விற்பனவு

லீற்றர் ரூ 13.45சதம்

J.C.S. பத்மநாதன்

18, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(விவேகானந்தர் புத்தகசாலைக்கு அருகில்)

(57664)


# கதிர்காமம் செல்லும் பக்தர்களுக்கு பாதுகாப்பு விதிமுறைகள் அறிவிப்பு

மட்டக்களப்பு ஜூலை 20

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கால் நடையாக கதிர்காமம் செல்பவர்களுக்கு பாதுகாப்புக் கருதிபாதுகாப்புத்தரப்பினரால்நிபந்தனைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

யால வனவிலங்குசரணாலய இராணுவமுகாம் பிரிகேடியர் இது தொடர்பாக மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

★ சகல அடியார்களும் முதலில் மாணிக்கங்கைப் பாலம் அருகில் சமுகமளிக்க வேண்டும். இப்பாலம் வழியாகச் செல்லவேண்டும்.

★ இரவு நடமாட்டம் தடை செய்யப்பட்டுள்ளது.

செல்லும் வழியிலுள்ள சோதனைச் சாவடிகள் அனைத்திலும் பொதிகள் தீவிர சோதனையிடப்படும்.

★ அடியார் குழு அல்லது கூட்டம் ஒருவரின் வழிகாட்டலில் செல்லவேண்டும். தலைவராகச் செயற்படும் அந்த வழிகாட்டியிடம் தேசிய அடையாள அட்டை இலக்கம் உட்பட பெயர்ப் பட்டியல் இருத்தல் வேண்டும்.

★ சகல அடியார்களுக்கும் உற்சவகாலத்தில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

இவ்வாறு பிரிகேடியர் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன்ஆரம்பமாகும் கதிர்காமக்கந்தன் உற்சவம் அடுத்தமாதம் 8 ஆம் திகதி தீர்த்தத்துடன் முடிவடையும்.

(ஐ-21)

# நூல் நிலையம் இயங்குகின்றது

நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல்நிலையம் இடப்பெயர்வுககுப்பின் புனரமைக்கப்பட்டு புதிய ஆட்சிக்குழு தெரிவுசெய்யப்பட்டு இயங்கி வருகிறது. (ஐ-30)

## கொக்குவில் கிழக்கு

# வெள்ள வாய்க்காலை திருத்தக் கோரி மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

கொக்குவில் கிழக்குப் பகுதியில் மழைகாலங்களில் மக்களுக்கு இன்னல் தரும் குளங்கரை வெள்ள வாய்க்காலை புனரமைத்து, ஆழப்படுத்தி, வெள்ளம் ஓட வழி செய்து தருமாறு ஈ.பி.டி.பி. அமைப்பிடம் அப்பகுதி மக்கள் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பல முறை வேண்டுகோள் விடுத்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை, அனுப்புகின்ற கடிதங்களுக்குப் பதில் கூட வருவதில்லை. கடந்த மாதமும், நல்லூர் பிரதேச சபையினரிடம் மழை வர இடம் பெயரும் அவலத்தை நீக்கக்கோரி மகஜரை அனுப்பியிருந்தோம். அதற்கு எதுவித பதில்களும் தெரிவிக்கப்படவில்லை. எனவே இது விடயத்தில் உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அம் மகஜரில் கோரப்பட்டுள்ளது.


(ஐ-ரீ)

# நோய்த் தடுப்பு ஆலோசனை

பாடசாலை அதிபர்கள் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது இப்பிரிவில் நெருப்புக்காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி அறிவுரை வழங்கப்பட்டது.

இதில் வைத்திய கலாநிதி சி. என். நச்சினார்க்கினியன் கருத்துரை வழங்கினார்.


# வாழ்த்துகின்றோம்



எமது சங்கங்களின் நிர்வாக சபை உறுப்பினரும்,
சமய சமூக சேவையாளரும்,
பிரபல வர்த்தகருமாகிய

## திரு. இராமலிங்கம் குழந்தைவடிவேலு

அவர்கள்

சமாதான நீதிவானாக

நியமனம் பெற்றதையிட்டு எமது மகிழ்ச்சியையும், அவரின் சமய, சமூகப் பணிகள் தொடர நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

நிர்வாகங்கள்
கைதடி கிழக்கு
சனசமூக நிலையம்,
சிக்கன கூட்டுறவுச் சங்கம்,
கைதடி.

(57706)



# 92 ஆம் நாள் நினைவஞ்சலி



பிரான்சில் அகாலமரணமான

## இரத்தினம் வீரசிங்கம்

மலர்வு 07 - 07 - 1949

உதிர்வு 20 - 04 - 1998

திதி: 20 - 07 - 1998

அகல் விளக்கேற்றி வைத்து
அணையாத தீபமாகி
அமரனை நாடி விட்ட
இரத்தினம் வீரசிங்கத்துக்கோர்
அர்ப்பணம் எதைத்தான் செய்வோம்?
நான் பெற்ற செல்வம்
ஆறாத கவலை ஐயா!

உன்னுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, சகோதரர்கள், மருமக்கள்.

கல்வளை றோட்,
சண்டிலிப்பாய்.

(57704)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

காரைநகர் சிவன்கோயில் மண்டல பூர்த்தி வைபவ நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை செவ்வாய் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மாலை நடேசர் பூசை, பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா, திருவூஞ்சல் ஆகியன விசேட நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (இ-7-30)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆடிச் செவ்வாய் அபிஷேகம் இடம்பெறும். (ஐ-173-30)

★ ★ ★

வண்ணை வட. மேற்கில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவீரமாபிடாரி அம்பாள் ஆலய மஹோற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. மஹோற்சவம் 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த் தோற்சவமும் இடம்பெறும்.

மஹோற்சவ காலங்களில் பிற்பகல் 4 - 5 மணிவரை ''பெரியபுராணம்'' என்னும் தலைப்பிலான சொற்பொழிவை ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார். (இ-ரி-30)

★ ★ ★

வண்ணை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான ஸ்ரீ அஷ்டஹஸ்த வீரமாகாளி அம்பாள் ஆடிப்பூர அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியது தொடர்ந்து 10தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். தீர்த்தோற்சவத்தை தொடர்ந்து அம்பாளின் ருதுசோபன விழா இடம்பெறும். (இ-ரீ-30)

★ ★ ★

புலோலி பார்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தான (பருத்தித்துறை சிவன் கோவில்) வருடாந்த மஹோற்சவம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும் உற்சவங்களில் 25ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

27 ஆம் திகதி ஆடிப்பூர விசேஷபூசையும், அம்பாளின் பூப்புனித நீராட்டுவிழாவும், தீர்த்தோற்சவமும் இடம்பெறும் (இ-15-173)

★ ★ ★

கொக்குவில் மேற்கு ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலய பத்தாம் திருவிழாவான இன்று காலை விஷேச சங்காபிஷேகம் நடைபெறும். மாலை ஆறுதிருமுருகன் ஆசிரியரின் சொற்பொழிவு இடம்பெற்று விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் வீதியுலா வருவார்.

(இ)

★ ★ ★

தெல்லிப்பழைஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் ஆடிச் செவ்வாய் தினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலைவிசேட அபிஷேக ஆராதனைகளும், மாலை விசேட திருவிழாவும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் வியாழக்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலையில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஐ-8-30)

★ ★ ★

கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பிகாதேவி சமேத விஸ்வநாதேஸ்வாமி தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவ தினங்களை முன்னிட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தினமும் மாலை 5.1.. மணிக்குசெஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் பெரிய புராண தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ஐ-8-30)

★ ★ ★

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்று வசந்தோற்சவமும், 22 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்த திருவிழாக்களும் நடைபெறவுள்ளன. (ஐ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம்
...கின்றது

...தற்கு ஸ்ரீலஸ்ரீ
...ண்டிதர் ஞாப
...நிலையம் இடப்
...பின் புனர
...புதிய ஆட்சிக்
...வுசெய்யப்பட்டு
...றது: (ஐ-30)

...லை
...கஜர்

...தெரிவிக்கப்பட
...னவே இது விட
...ன் தலையிட்டு
... எடுக்குமாறு
... கோரப்பட்டுள்
(ஐ-ரீ)

...யத்
...ப்பு
...ாசனை

...ல அதிபர்கள்
...து அமைப்பின்
...ள் கலந்து
...ட்டம் வலிகாமம்
...தசபை மண்ட
...மையில் நடை
... இப்பிரிவில்
...ய்ச்சல் தடுப்பு
...கள் பற்றி அறி
...கப்பட்டது.
...வத்திய கலாநிதி
...சினார்க்கினியன்
...வழங்கினார்.

...ல்

...து.
...து 10 நாட்கள்
... உற்சவங்களில்
... சப்பறத்திரு
...26 ஆம் திகதி
...ழாவும் நடை

...கதி ஆடிப்பூர
...யும், அம்பாளின்
...ாட்டுவிழாவும்,
...வமும் இடம்
(இ-15-173)

★ ★

...ல் மேற்கு ஸ்ரீ
...தி விநாயகர்
...ாம் திருவிழா
... காலை விஷேச
...ஷகம் நடை
...லை ஆறுதிருமுரு
...யரின் சொற்
...ம்பெற்று விநா
...ான் பூந்தண்டி
...லா வருவார்.
(இ)

★ ★

...ழைஸ்ரீ துர்க்கா
...தவஸ்தானத்தில்
...ாய் தினத்தை
...நாளை செவ்
... காலைவிசேட
...ராதனைகளும்,
...ட திருவிழா
...பறவுள்ளன.
... வியாழக்
... அமாவாசை
... கீரிமலையில்
...வுகள் இடம்
(ஐ-8-30)

★ ★

...ட வற்றாக்
...ஸ்ரீ விசாலாட்சி
... சமேத விஸ்வ
... தேவஸ்தானத்
...ர உற்சவ
... முன்னிட்டு
...7 ஆம் திகதி
...ம் மாலை 5.1.
... சொற்செல்வர்
...நகனின் பெரிய
...தாடர் சொற்
... இடம்பெறவுள்
(ஐ-8-30)

★ ★

... பண்டைகைப்
... தேவஸ்தான
...ற்சவம் கடந்த
... கொடியேற்றத்
...பமாகியது.
...தோற்சவமும்,
... வேட்டைத்திரு
... ஆம், 24 ஆம்
...முறையே தேர்,
... விழாக்களும்
...ள்ளன. (ஐ-11)



## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுநர் தின சுழல் கேடய தோல்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் ஜூலை, 27 ஆம் 28 ஆம் 29 ஆம் 30, ஆம் 31, ஆம் திகதிகளிலும் ஓகஸ்ட் 1 ஆம் திகதியும் பிற்பகல் 2. 30 மணியில் இருந்து பிற்பகல் 6 மணி வரை நடைபெறும்.

பங்குபற்றவிரும்பும் கழகங்கள் போட்டிக்குழுசெயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 22 ஆம் திகதி ஆகும்.

யாழ். மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் இப்போட்டிகளை நடத்துகின்றது. (இ-ரி)

# போதியளவு மலத்தியோன் இன்றி நுளம்பு ஒழிப்புப் பணி பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மாநகர சுகாதாரப் பகுதிக்கு குறைந்தளவு மலத்தியோன் வழங்கப்படுவதால் அனைத்துப் பகுதிகளிலும் மலத்தியோனை விசிற முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் நான்கு தடவைகள் மாநகர எல்லைக்குள் மலத்தியோன் விசிற வேண்டும். ஒரு தடவை விசிறுவதற்கு மட்டும் 18 ஆயிரம் கிலோ மலத்தியோன் தேவைப்படுகின்றது.

ஆனால் 50 கிலோ மலத்தியோன் மட்டுமே ஒவ்வொரு தடவையும் வழங்கப்படுகின்றது.

இதனால் மலேரியா ஒழிப்பினை தீவிரமாக மேற்கொள்ள முடியாத நிலை சுகாதாரப் பகுதியினருக்கு ஏற்பட்டுள்ளது.

மலத்தியோன் விசிறுவதற்கு ஒரு பிரிவு மட்டும் இருப்பதால் தொடர்ச்சியாக மலத்தியோனை விசிற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-6-15)

## ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மருதங்கேணிக் கல்விக் கோட்டத்துக்கு 14 விஞ்ஞான, கலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மருதங்கேணிக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி. அருளானந்தம் தெரிவித்துள்ளார். (ஐ-8)

## சுகாதாரத் தொண்டர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் நடத்தப்படும் சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சி நெறி நாளை திங்கட்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சூழல் சுகாதாரம், தொற்று நோய்களும் அதன் கட்டுப்பாடும் நுளம்பினால் பரவும் நோய்கள் மீளக்குடியமரும் போது ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக தொண்டர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

ஆறு நாள்களுக்கு இப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது. (இ-5-6)

## ஆறு மாதங்களின் பின் இலவச பாடநூல்!

வலிகாமம்தெற்கு, ஜூலை 20

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான இலவசபாடநூல்கள் இவ்வருடம் இரண்டாவது தடவையாக கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வருடத்துக்கான பாடநூல்களை முதல் முறை வழங்கிய போது பல நூல்கள் வழங்குவதற்குப் போதுமானதாக இல்லாதிருந்தமையால் மீண்டும் இந்நூல்கள் தேவையான பாடசாலைகளுக்கு இப்போது வழங்கப்பட்டுள்ளன.

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான நூல்கள் கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் வழங்கப்பட்டன. (ஐ-15)

## உலர் உணவு விநியோகம்

தென்மராட்சி, ஜூலை 20

இடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரையின் 63 'ஏ', 63 'பி' இலக்க புள்ளிகளுக்கான உலர்உணவுப் பொருள்கள் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் கிளைக் கடைகளில் வழங்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (ஐ-117)

# குடாநாட்டில் 90 வீத பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்பட வேண்டும்

### கல்விப் பகுதிப் பொறியியலாளர் தகவல்

வலி. தெற்கு, ஜூலை 20

யாழ். மாவட்டத்தில் கடந்த கால போர் அனர்த்தங்களால் 90 சத வீதமான பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டிய நிலையில் உள்ளன.

பல கட்டடங்கள் புதிதாக அமைக்கப்படவேண்டி உள்ளன. புனர்நிர்மாணப்பணிக்கென ஒதுக்கப்படும் நிதி சகல பாடசாலைத் தேவைகளுக்கும் போதுமானதல்ல. பாடசாலை நிர்வாகம் தமது பாடசாலைகளுக்கென ஒதுக்கப்படும் நிதியை குறிப்பிட்ட காலத்துக்குள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு. சிவபாலன், ஸ்கந்த வரோதயக்கல்லூரி மெய்வல்லுநர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் க. சிவாஜி தலைமையில் அண்மையில் போட்டிகள் நடைபெற்றன.

ஸ்கந்தவரோதயா கல்லூரி சகல பௌதிக வளங்களையும் கொண்டு சிறப்பாக இயங்கியது. சகலதுறைகளிலும் பல தலைவர்களை உருவாக்கிய கல்லூரி. அது பழைய நிலைக்கு திரும்ப, தேவையான சகல பௌதிக வளங்களையும் கல்வித் திணைக்களம் வழங்க தயாராக உள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்றன இக்கல்லூரிக்கு ஒதுக்கப்படும் நிதியை உரிய முறையில் பயன்படுத்தினால் மேலும் நிதிகளைப் பெறும் வாய்ப்பு ஏற்படும். மாணவர்களுக்கு சரியான பயிற்சி வழங்கினால் இலங்கை மட்டத்தில் மட்டுமல்ல உலகமட்ட போட்டிகளில் கூட பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைக்கும்—

இவ்வாறு அவர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

உடுவில் கல்விக்கோட்டக் கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

திருமதி வசந்திமாலா சிவபாலன் பரிசுகளை வழங்கினார். (ஐ-152)

## செம்மணி புதைகுழி:

## விசாரணை நடத்த இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

"செம்மணிப் புதைகுழி தொடர்பான உண்மைகளை கண்டறிவதற்கு காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்"

இப்படி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கோரியுள்ளது.

கிருஷாந்தி பாலியல் வல்லுறவு கொலை வழக்கின் குற்றவாளி ஒருவர் செம்மணியில் மேலும் 400 சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த தகவலை அசட்டை செய்யமுடியாது. தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு உண்மையை விரைவில் கண்டுபிடிக்கவேண்டும்.

இப்படி மேற்படி இணையம் கோரியுள்ளது. (இ-5-6)

## விண்ணப்பதாரர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு உதவி விரிவுரையாளர்களை நியமிப்பதற்காக கொழும்பில் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். விண்ணப்பதாரர்கள் பலர் ஏமாற்றம் அடைந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்பு சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தபாலில் சேர்த்திருந்தனர் எனவும்—

ஆனால் தற்போது கொழும்பிலுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமை அலுவலகம் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் தம்மிடம் வந்துசேரவில்லை என்று கூறியுள்ளதாகவும் — தெரியவருகிறது.

இதனால் யாழ். மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த 10க்கும்மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

உதவி விரிவுரையாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம், 22 ஆம், 23 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விசேட வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் 1998 ஜி. சீ. ஈ. (உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள கலை, வர்த்தக, மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள் திட்டமிட்டவாறு இன்று திங்கள் காலை 8-30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# முழுமையான சமய பாரம்பரியங்களை இளந்தலைமுறையினருக்கு விளக்குக

### பரிசளிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 20

சமய, சமுதாய விழுமியங்களை பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இளந்தலைமுறையினருக்கு எடுத்து விளக்குவதன்மூலமே முழுமையான சமய பாரம்பரியத்தைப் பின்பற்றும் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். இல்லையேல் எதிர்காலத்தில் மிகப் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி நேரிடும்.

யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் யாழ். சைவ பரிபாலன சபையினரால் நீராவியடி நாவலர்ஆச்சிரமத்தில் நடத்தப்பட்ட சமய பாடப் பரீட்சைப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

சைவமும், தமிழும்பேணிய நாவலர் தான் வாழ்ந்த சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு செயலாற்றியவர். இளந்தலைமுறையினருக்கு சமயக் கருத்துக்களை எடுத்துக்கூறுவதற்காகவே சைவப் பாடசாலைகளை நிறுவியதோடு சமயநூல்களையும் வெளியிட்டார்.

நாவலரின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகவும், சைவ நெறிசார்ந்தசிந்தனைகளைப் பரப்புவதற்காகவும் அன்று தொட்டு செயலாற்றி வரும் நிறுவனம் யாழ். சைவ பரிபாலன சபை, பிற சமயங்களின் ஊடுருவல்கள் மிகுதியாக இருந்த கால கட்டத்தில் காலத்தின் தேவையை உணர்ந்து செயற்பட்ட நிறுவனம் இது.

சமய பாடப்பரீட்சைகளை நடத்துவதன் மூலம் இளந்தலை முறையினருக்கு சமய அறிவைப்புகட்டி வரும் நிறுவனம் சைவபரிபாலன சபை. இன்று சான்றிதழ்களைப் பெறும் மாணவர்கள் சான்றிதழ்களைப் பேணிப் பாதுகாப்பதோடு மட்டும் நின்றுவிடாது, தாமும் சமய நெறியில் நின்று மற்றவர்களையும் சமயவாழ்வில் நிற்க வழிகாட்டுபவர்களாக விளங்க வேண்டும்.

சமயக் கல்வியின் அடிப்படை அறிவின்மையே இன்று ஆலயங்களில் மீண்டும் பலியிடல் ஆரம்பமாகக் காரணம். ஆகவே இவ்விடயம் குறித்து இளஞ்சமுதாயம் விழித்தெழவேண்டும் —என்றார்.

நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

அவர் கூறியதாவது:-

சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளங்கிக் கொள்வதற்காகவே இத்தகைய போட்டிகள் நடத்தப்படுகின்றன, இத்தகைய போட்டிகள் வெறும் போட்டிகளாகவும், சான்றிதழ் வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாது மனிதவாழ்வை செம்மைப்படுத்துவனவாக விளங்குதல் வேண்டும்.

அந்நிய மதங்கள், கலாசாரங்கள் எம் மண்ணில் தலையெடுத்த காலத்தில் தனிமனிதனாய் நின்று சமயத்தையும், அதனது பண்பாட்டையும் பாதுகாப்பதற்காக அயராது உழைத்தவர் நாவலர் பெருமான். அவரால் அக்காலத்தில் ஆலயங்களில் நடைபெற்ற மிருகப்பலியை தடுத்து நிறுத்த முடிந்தது. ஆனால் தற்போது எத்தனையோ சமய நிறுவனங்கள் இருந்தும் ஏன் மிருகபலியை தடுத்து நிறுத்த முடியவில்லை? இவ்விடயம் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்—என்றார்.

கௌரவ பரீட்சைக் காரியதரிசி சைவப்புலவர் வ. கந்தசாமி விழாவுக்கு தலைமை வகித்தார்.

பரிசளிப்புவிழாவில் பண்ணிசைக் கச்சேரியும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. (ஐ-7

## 'ஹண்டி'கப்பலின் நங்கூரம் அறுந்து கடலில் வீழ்ந்தது

வடமராட்சி, ஜூலை 20

அத்தியாவசியப் பொருள்களுடன் வடக்கே வந்து சேர்ந்த 'மேக்ஸ் ஹண்டி' கப்பலின் நங்கூரம் அறுந்து கடலுக்குள் வீழ்ந்தது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் இக்கப்பல் தரித்து நின்ற வேளையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

நங்கூரம் அறுந்து கடலுக்குள் விழுந்ததையடுத்து நங்கூரத்தைத் தேடி எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. நங்கூரம் இன்மையால் பொருள்களை இறக்க இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரவில்லை. (ஐ-173)

## துப்பாக்கிச் சூடு; யுவதி காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனை காகித ஆலைப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் ஒன்றில் யுவதி ஒருவர் காயமடைந்தார்.

வாழைச்சேனை விநாயகபுரம் அகதி முகாமில் வசித்த தி. நிர்மலா (வயது 17)என்ற யுவதியே காயமடைந்தவராவார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு உதவித் திட்டங்களை செயற்படுத்த மக்கள் ஒத்துழைப்பு

## யாழ். அரசாங்க அதிபர் கோருகிறார்

வடமராட்சி, ஜூலை 20
யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கிவரும் உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பொது மக்களும் தம்மாலான ஒத்துழைப்பினை முழுமையாக வழங்க வேண்டும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் கடந்த மாதம் புனரமைக்கப்பட்ட உடுப்பிட்டி மீன் சந்தையைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் ஆறரை இலட்சம் ரூபா செலவில் இம் மீன் சந்தை புனரமைக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட இச் சந்தையின் திறப்பு விழா வடமராட்சி தென்மேற்குப் பிரதேச செயலாளர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இச் சந்தையைத் திறந்து வைத்த யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பல வெளிநாட்டு நிறுவனங்கள் யாழ். குடாநாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதில் அக்கறை காட்டி வருகின்றன. அவர்களின் உதவிகளைத் தக்க முறையில் பயன்படுத்தி எமது பிரதேசத்தை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானதாகும்.

சந்தை வசதிகள் அதிகரிக்கும் போது உற்பத்தியாளர்களும், பாவனையாளர்களும் போதிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் — என்றார்.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலாளர் செ. ஸ்ரீநிவாசன் தனது தலைமையுரையில் —

இப்பகுதியில் மீன் சந்தை வசதிகள் குறைவாக இருந்தமையால் மீனவர்கள், மீன் பாவனையாளர்கள் கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். இச் சந்தை அமைக்கப்பட்டதனால் இருதரப்பினருக்கும் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கியுள்ளன — என்றார்.

இத் திறப்புவிழாவில்யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன், வடமராட்சி தென்மேற்குப் பிரதேசசெயலக உதவிதிட்டமிடல் பணிப்பாளர் திருமதி பு. நடராசா ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

(ஐ-173)

## உப்பள ஊழியர்களின் கஷ்ட நிலை

மேற்படி விடயமாக 04 — 06 — 1998 வியாழக்கிழமை 'உதயனில்' பிரசுரமாகிய வாசகர் திருமுகம் தொடர்பாக இதனை எழுதுகின்றேன் —

வடபிராந்திய லங்காசோல்ட் லிமிட்டற்றின் சிரேஷ்ட உயர் அதிகாரி என்ற வகையில், உண்மை நிலையை, தக்க ஆதாரங்கள் மூலம், உப்புக் கூட்டுத்தாபன லங்கா சோல்ட் லிமிட்டட் வட பிராந்திய ஊழியர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகும்.

1994 இல் வட பிராந்திய உப்புக் கூட்டுத்தாபன அமைய பருவகால ஊழியர்களுக்கான சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் மீளக் கொடுப்பனவுகளை திருத்தச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தவேண்டுமென வட பிராந்திய உப்பள ஊழியர் சேவை நலச் சங்கம் உப்புக் கூட்டுத்தாபன நிர்வாகத்திடம் கேட்டிருந்தது. அதற்கிணங்கஉப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் 09— 05— 1994இல் கடித மூலம் தொழில் ஆணையாளரின் அனுமதியைக் கோரியிருந்தார். ஆனால் வட பிராந்திய உப்பள அதிகாரிகள், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் சிலரது முழுக்கடமை அலட்சியங்களாலும் ஒழுங்கீனங்களாலும் இதனைச் செயற்படுத்த முடியவில்லை.

வாசகர் திருமுகம்

வட பிராந்திய நிரந்தர ஊழியர்களுக்கு 1995ஆம், 1996ஆம் ஆண்டுகளுக்கான சம்பளமாக 2 கோடியே 44 லட்சம்ரூபா அரசாங்கத்தினால் 1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அங்கீகரிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டுக்கான சம்பளம் 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ். அரச அதிபர் ஊடாக வழங்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டுச் சம்பளப் பட்டியலைத் தயாரித்தவர்கள் வழமையான அறிவுறுத்தல்களையும், விதி முறைகளையும் மீறியுள்ளார்கள். அதனால் 1995 ஆம் ஆண்டுச் சம்பளப் பட்டியலில் பல தவறுகள் ஏற்பட்டுள்ளன. அதன் விளைவாக சில ஊழியர்களுக்கு 1995 ஆம் ஆண்டுச் சம்பளம் இன்றுவரை வழங்கப்படவில்லை என்பது சரியானதே.

அதேபோல் 1992 ஆம் ஆண்டு மார்ச்மாதம் உப்புக்கூட்டுத்தாபன ஊழியர்களது ஊழியர்நம்பிக்கைநிதிமீளக்கொடுப்பனவில் சம்பந்தப்பட்ட சில அதிகாரிகளின் தவறுகளால் ஐம்பதுக்கு மேற்பட்ட ஊழியர்களது மீளக் கொடுப்பனவு கொடுபடாமல் இருப்பதுடன் அப்பணத்திற்கு என்ன கதி நேர்ந்தது என இன்றுவரை அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் தெளிவுபடுத்தவில்லை.

இவற்றுக்கு மேலாக 1990 இல் இருந்து இளைப்பாறிய பல ஊழியர்களது சட்டபூர்வமான கொடுப்பனவுகள்இன்றுவரை தீர்க்கப்படாமல் இருக்கின்றது. கொடுப்பனவுகளில் ஏற்பட்ட தவறுகள் திருத்தப்பட வேண்டியவையே அன்றி நியாயப்படுத்தப்பட வேண்டியவை அல்ல. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடமை ஒழுங்கீனங்கள், அலட்சியங்கள், தவறுகள் காரணமாக பிராந்திய அலுவலக நானாவித செலவுகளுக்கு கூட்டுத்தாபன வங்கிக் கணக்கிலிருந்து செயற்பட முடியவில்லை. எனவே பிராந்திய அலுவலக நானாவித செலவுகளை வட பிராந்திய உப்பள ஊழியர் சேவை நலச் சங்கம் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த 8 ஆண்டுகளாக துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டு நாட்டின் எல்லாத்திசைகளுக்கும் சிதறப்பட்டிருக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தொழிலாளர்களின் நலன் கருதி எல்லா ஊழியர்களும் நன்மை அடையும் வகையில் எனது கடமையைச் செய்து வருகின்றேன்.

தி. சிறிஇராமநாதன்
உற்பத்தி முகாமையாளர்,
பிராந்திய முகாமையாளருக்காக,
வட பிராந்தியம்.

வடபிராந்திய அலுவலகம்,
மிருசுவில்.

## மக்களிடம் பணம் சேகரிப்பது ஏன்?

வலி — கிழக்குப் பிரதேச செயலகக் கட்டடம் கட்டுவதற்குத் தேவைப்படும் காணியை வாங்குவதற்கு கிராம சேவகர்கள் ஊடாக மக்களிடம் இருந்து நிதி சேர்க்கப்படுவது அதிசயமாக இருக்கிறது.

அரசாங்கத் தேவைக்கு காணி வாங்கும் போது மக்களிடமிருந்துபணம் சேர்ப்பது மிகவும் அசாதாரணமானசெயல். வேறு எத்தனையோ வழியில் தேவைப்படும் பணத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தும் பல வழிகளிலும் நொந்து போய் இருக்கும் மக்களைக் கஷ்டப்படுத்துவது புரிந்து கொள்ள முடியாததாக உள்ளது. பொறுப்பில் இருக்கும் அரசாங்கம் கோடி கோடி ரூபாக்களை தமிழ் மக்களின் உடைமைகளையும், உயிர்களையும் அழிக்கும் முயற்சிக்கு செலவு செய்யும் பொழுது இப்படியான மிக அவசிய தேவைக்குப் பணம் ஒதுக்க முடியாமல் இருப்பதாகக் கருத முடியாது.

மக்களிடம் பணம் சேகரிக்க வேண்டும் என்ற யோசனையை வழங்கிய அதிகாரியார்? அரசாங்கமோ, அரச உத்தியோகத்தர்களோ மக்களுக்கு நன்மை செய்யா விட்டாலும் தீமையாவது செய்யாதிருந்தால் வேண்டத்தக்கது.

ச. தேவரத்தினம்

உரும்பிராய்.

## களுத்துறையில் 27 தமிழர் போட்டி

கொழும்பு, ஜூலை 20
எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஐ. தே. கட்சி சார்பில் 27 தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இம்முறையே அதிகளவு தமிழ் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய தொழிலாளர் காங்கிரஸ் கட்சியில் 26 வேட்பாளர்களும், ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு வேட்பாளரும் மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

(இ-7)

## தந்திரதேவா விஜயம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20
திருமலையில் ஆச்சிரமம் அமைத்து சமூகப் பணியாற்றிவரும் அமெரிக்கத் துறவி சுவாமி தந்திரதேவாவின் யாழ். விஜயம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக வடபிராந்திய இந்துப் பேரவை தெரிவித்துள்ளது.

அவர் நேற்று முன்தினம் வெள்ளியன்று யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஐ)

## நெல்லியடிப் பெண் சடலமாக மீட்பு

### குண்டசாலையில் சம்பவம்

கண்டி, ஜூலை 20
வடமராட்சி நெல்லியடியைச் சேர்ந்த யுவதி ஒருவர் குண்டசாலையில் உள்ள வீடொன்றில் இருந்து கழுத்தில் சுருக்கிடப்பட்ட நிலையில் சடலமாக கடந்த வெள்ளியன்று மீட்கப்பட்டார்.

சிவஞானம் சஜிதா (வயது 25) என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சிங்கப்பூரில் வேலை பார்த்ததாகக் கூறப்படும் இந்தப் பெண் 36 நாள்களுக்கு முன்னரே கொழும்பு திரும்பினார் எனவும் —

டென்மார்க் செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்காக இவர் மத்திய இலங்கையிலிருக்கும் மெனிக்கின்ன பொலீஸ் பிரிவிலுள்ள குண்டசாலையில் உள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று பொது மக்கள் கொடுத்த தகவலின் பேரில் இவரது சடலம் சுருக்கிட்டு தொங்கிய படி மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து மெனிக்கின்ன பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)


## நல்லூர் ப.நோ.கூ. சங்கம்
## வெற்றுச்சாக்கு, உரப்பைகள் விற்பனை

எமது சங்கத்தில்1,00,000 வெற்றுஉரப்பைகளும், 3,000 வெற்றுச் சாக்குகளும் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. பெற விரும்புவோர் 25-7-98-க்கு முன் விண்ணப்பங்களை சங்கக் காரியாலயத்தில் நேரடியாகச் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

(சி/4324)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**கனகசுந்தரம் பூலோகராஜா**

(பங்காளர், ராசிசில்க்ஸ் யாழ். கொழும்பு,
நல்லி சில்க்ஸ் யாழ்.)

தோற்றம் 28 - 07 - 1933 | மறைவு 31 - 07 - 1997

திதி:- 20 - 07 - 98

எண்ணமதில் நீங்காத எமதருமை ஐயாவே!
மண்ணதனை விட்டேகி வருடம் ஒன்றாகியதே!
அன்புக்கோர் அகல் விளக்காய்
ஆற்றலுக்கோர் உத்தமனாய்
பண்பிற்கோர் தெய்வமாய்
நேசமாய் நெஞ்சிருத்தி எம்மை
வாழ வகை செய்து வாழ்வித்தீர்
கண் போலவும் எமை வளர்த்த
கருணை மிகு ஐயாவே!
விண்ணோரும் போற்ற வாழ்க நின் நாமம்.

உங்களது ஆத்ம சாந்திக்காகஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்களது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்; மனைவி
70/7, கிறீன் லேன்,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13 T. P. 321562

(சி-4292)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கௌரவப் பிரச்சினை ஏன்?

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் கப்பற் சேவையை ஒழுங்காக நடத்துவதற்கென்றே அரசாங்கம் கொரியக் கப்பல் ஒன்றைப் பெற்றுக் கொண்டது.

இந்தச் செய்தி அறிந்ததும் வவுனியா மற்றும் மன்னார் முகாங்களில் தங்கியுள்ள குடாநாட்டைச் சேர்ந்த அகதிகளும் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களுக்கும் ஒருவகை நம்பிக்கை பிறந்தது.

யாழ்ப்பாணம் வருவதற்கென முகாங்களில் பல மாதங்களாகக் காத்திருப்போர், கப்பற் பயணம் ஒழுங்காக, கிரமமாக, சீராக நடைபெற்றால் நாம் வேண்டாத சிரமங்கள் இன்றி இங்கு வந்து சேர்ந்து விடலாம் என்று திருப்தி கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே செல்வதற்கு விமானப் பயணம் மேற்கொள்ளப் பணவசதியில்லாத மக்களும் கப்பல் சேவை ஒழுங்காக நடைபெறும் என்பது அறிந்து ஆறுதலடைந்தனர்; மகிழ்ந்தனர்.

காங்கேசன்- திருமலைப் பணிகள் சேவைக்கென்றே குறிப்பிட்ட கப்பல் கொரியாவிடமிருந்து புறப்பட்டு மாதமும் ஒன்று கழிந்து விட்டது. ஆனால் அது எப்போது தனது சேவையைத் தொடங்கும் என்பது எவருக்குமே தெரியாத ஒன்றாகி உள்ளது.

கப்பல் சேவை நிச்சயமானபின்னரே, வவுனியா, மன்னார் அகதி முகாமில் உள்ளவர்களை திருகோணமலைக்கு வருவிக்கப் போவதாக திருமலைப்பட்டணமும் சூழலும் தேசசபைச்செயலாளர் தெரிவித்திருப்பதானது — கொரியாவிடமிருந்து புறப்பட்ட கப்பல் இப்போது சேவையைத் தொடங்க மாட்டாது என்பதனையே தொட்டுக் காட்டுவதாக உள்ளது!

கொரியக் கப்பல் எந்த நாட்டுக் கொடியுடன் சேவையில் ஈடுபடுவது என்ற பிரச்சினையினாலேயே இந்தத் தாமதம். இலங்கைக் கொடியுடன் சேவையில் ஈடுபட கொரிய மாலுமிகள் மறுத்து விட்டனர். கொரியக் கொடியுடன் கப்பல் சேவையில் ஈடுபடுவது தனக்குக் கௌரவக் குறைவு என்று இலங்கை அரசு கருதுகிறது.

இலங்கைக் கடற் பிரதேசத்தில் தனது சொந்தக் கப்பல்கள் சேவையில் ஈடுபடுவதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்க முடியாத இயலாமை நிலையிலேயே அரசு உள்ளது.

அவ்வாறிருக்க, வெளிநாட்டுக்காரருக்குச் சொந்தமான கப்பல்களை அந்நாட்டுக் கொடிகளுடன் சேவையில் ஈடுபடுவதற்கு மறுப்புத் தெரிவிப்பதில் அர்த்தமில்லை; நியாயமும் இல்லை.

அரசின் கௌரவப் பிரச்சினைக்கு ''பலி''யாகுபவர்கள் தமிழ் மக்களே; தமது சொந்த இடங்களுக்குத்திரும்பி வருவதற்குத் தவம் கிடக்கும் அகதிகளே!

அகதிகளின் நலன்கருதி மனிதாபிமான அடிப்படையிலாவது, தனது இயலாமையை உணர்ந்தாவது அரசு கௌரவத்தை விட்டுக் கொடுக்கக் கூடாதா?

# நீரை மட்டுப்படுத்திப் பாவியுங்கள்; இன்றேல் கிணறுகள் உவராகும்

## குளங்களை வருடாந்தம் ஆழமாக்கி மழைநீரைத் தேக்குவது கட்டாயம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கிணறுகளின் தண்ணீர்உப்பு நீராக மாறும் என்ற முந்திய ஆய்வு எச்சரிக்கை இப்போது நிறைவேறி வருகிறது.

தண்ணீரை மட்டுப்படுத்திப் பயன்படுத்துவதோடு, மழை நீரைத் தேக்குவதுமே இந்த அபாயத்தில் இருந்து தப்புவதற்கான வழியாகும்.

இவ்வாறு தெரிவித்தார் நோர்வே நாட்டு நீரியல் நிபுணருடன் வந்த பிரபல நீரியல் நிபுணர் கலாநிதி க. சண்முகநாதன்.

குடா நாட்டின் நீரியல் நிலைமை குறித்து அவர் எமது செய்தியாளருக்கு வழங்கிய பேட்டி வருமாறு;-

கேள்வி:- யாழ். மாவட்ட நீர்வளம் தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

பதில்:- யாழ். மாவட்டத்தில் மழை காலத்தில் குறிக்கப்பட்ட அளவு நீர் கிடைக்கிறது. ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் கிடைக்கும் மழை நீரைக் கொண்டு ஒரு வருடத்திற்கு சமாளிக்க வேண்டும். இதனை விட சிறுமாரி என்று கூறப்படும் ஏப்ரல், மே மாதங்களில் குடாநாட்டிற்கு 20 வீதமான மழை கிடைக்கிறது; சில வருடங்களில் இந்த மழை பொய்த்து விடுகிறது.

மூன்று மாதத்துக்கு கிடைக்கும் மழை நீரைத் தேக்கி வைத்து வருடம் முழுவதும் பாவிக்க வேண்டும். நிலத்துக்கடியில் வெடிப்புகள் சிறிய குகைகள் இருப்பதால் நீரைச்சேர்த்துவைக்கக்கூடியதாக இருக்கிறது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் இவ்வாறானநிலையில்லை. தண்ணீர் கீழே எவ்வளவுக்கு செல்கின்றதோ அந்தளவுக்கு நன்மையே கிடைக்கும்.

கே:- நன்னீரைப்பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: நிலத்துக்கடியில் உப்பு நீர் கீழேயும், நன்னீர் மேலேயும் இருக்கிறது. நன்னீரை நாம் கூடுதலாக வெளியே எடுப்பதால் நன்னீர் குறைந்து கொண்டு போக, கீழே உள்ள உப்பு நீர் மேலே வருகிறது; இதனாலேயே நன்னீர்க்கிணறுகள் உவர்நீராக மாறி வருகின்றன.

ஒரு கிணற்றிலிருந்து பல தேவைகளுக்காக நாம் நீரைப்பயன்படுத்துகின்றோம். குளிப்பதற்கு, குடிப்பதற்கு, வீட்டில் பூ மரங்கள் மற்றும் தோட்டங்களுக்கு நீர்பாய்ச்சுவதற்கென நாம் கட்டுப்பாடு எதுவுமின்றி நீரைப் பயன்படுத்துகின்றோம். தண்ணீரை மட்டுப்படுத்திப் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் உவர் நீரே மிஞ்சும்.

மழையினால் கிடைக்கும் நன்னீரைப் பாதுகாப்பதற்கான குளங்கள், துரவுகள், அணைக்கட்டுகள் ''பறாஜ்கள்'' (துருசுகள்) என்பன மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருக்கின்றன.

குடாநாட்டில் ஆயிரம் குளங்கள் வரை இருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் மழை நீரைத் தேக்கி வைப்பதன் மூலம் போதிய நன்னீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கே: யாழ். மாவட்டத்திலுள்ள குளங்கள், துரவுகள், அணைக்கட்டுகள், 'பறாஜ்கள்' போன்றவற்றின் தற்போதைய நிலை என்ன?

ப: குளங்கள் பல தூர்ந்து போயுள்ளன. துரவுகளும் அப்படித்தான். அணைக்கட்டுகளும் அழிந்த நிலையிலுள்ளன. 'பறாஜ்களும்' நீண்டகாலமாக பயன்படுத்தாமையினால் பயனற்ற நிலையிலிருக்கின்றன. இதனால் மழை நீரும், கடல் நீரும் கலக்கின்ற நிலையிருப்பதால் நன்னீர் நீண்டகாலமாகத் தேக்கி வைக்கப்படவில்லை.

### நன்னீரைத் தேக்குதல்

'பறாஜ்களைப்' பொறுத்தவரை தொண்டமானாறு 'பறாஜ்' திருத்தியமைக்கப்படவேண்டும். இது 1953, 56 ஆம் ஆண்டுகளில் மழை நீரைத் தேக்கி வைப்பதற்காகக் கட்டப்பட்டது; இப் பறாஜ்க்குள் நன்னீர் தேக்கி [illegible] இப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டது. அதனால் காலத்துக்குக் காலம் இந்த பறாஜ்ஜின் கதவுகள் உடைக்கப்பட்டன. தற்பொழுது யுத்தம் காரணமாக இந்த பறாஜ் சேதமடைந்துள்ளது.

### நிலத்தில் ஈரலிப்பு

இதே போன்று கண்டிவீதி செம்மணிக்கும் நாவற்குழிக்கும் இடையிலுள்ள உப்பாறு பறாஜ் உள்ளது. இதுவும் நன்னீரைத்தேக்கிவைப்பதற்காக அமைக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் இந்த பறாஜ்ஜிற்குள் மழை நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தமையால் இதற்கு அருகிலுள்ள கிராமங்கள் பல நன்மைகளை அடைந்திருந்தன. அந்தப் பகுதிக் கிணறுகளில் நன்னீர் தொடர்ச்சியாக இருந்தமை, மற்றும் விவசாயக் கிணறுகளில் நீர் தாராளமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் நன்னீர் இந்த பறாஜ்ஜிற்குள் தேங்கி இருக்க இதற்கு வெளியேயுள்ள பரவைக் கடலில் கடல் நீரும் கூடுதலாக இருந்தது. இதனால் நிலம் ஈரலிப்புத்தன்மையாக இருந்தது.



நோர்வே நீரியல் நிபுணர் குழுவின் ஒருவராக யாழ்ப்பாணம் வந்தார் கலாநிதி க. சண்முகநாதன்.

கலாநிதி க. சண்முகநாதன் யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது பிரிட்டிஷ் பிரஜை.

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட விரிவுரையாளராக 7 வருடங்கள் கடமையாற்றிய இவர் லண்டனிலுள்ள வோலிங்கோட் நீர் ஆராய்ச்சிக் கூடத்தில் 25 வருடங்களுக்கு மேலாக நீரியல் நிபுணத்துவ ஆலோசகராகக் கடமையாற்றியுள்ளார். இந்த ஆராய்ச்சிக் கூடத்தின் ஏற்பாட்டில் பல நாடுகளுக்குஞ் சென்று நீரியல் தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன் நீர் வளம் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியவர். கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்திலிருந்து ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து விலகி நீரியியல் ஆலோசகராக சுயேட்சையாக இயங்கி வருகிறார்.

யாழ். மாவட்டத்தில் நன்னீரைத் தேக்கி வைப்பது தொடர்பாக நோர்வே அரசு தான் மேற்கொள்ளவிருக்கும் திட்டத்திற்கான சாத்தியக் கூற்று அறிக்கையைத் தயாரிப்பதற்காகக் கலாநிதி சண்முகநாதனின் நிபுணத்துவ ஆலோசனையை நாடியுள்ளது. அந்த வகையில் நோர்வே நாட்டு நீரியியல் நிபுணருடன் இவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தது.

யாழ்ப்பாணத்தில் நோர்வே நாட்டு நிபுணரான கலாநிதி எரிக்ஹலன்ட் ஹசேன் என்பவரும் இவரும் ஒரு வார காலம் தங்கியிருந்து அணைக் கட்டுகள், பறாஜ்கள், குளங்கள் போன்ற நீர் தேக்கி வைக்கக் கூடிய அனைத்து இடங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டதுடன் இது தொடர்பான உள்ளூரிலுள்ள பல நிபுணர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடந்த பத்து வருடங்களாக இந்த பறாஜ் பயன்படுத்தப்படாமையினால் நன்னீரும் கடல் நீரும் சேர்ந்திருந்ததுடன் மழை காலங்களில் இங்கு தேங்கி நிற்கும் நீர் கோடை காலங்களில் வற்றிவிடுவதனால் நிலம் காய்ந்து காற்று வீசும்போது அங்கிருக்கும் உப்பு மண் கிராமங்களுக்கு அள்ளி வீசப்படுகின்றன.

உப்பு மண் பட்டு விவசாயப் பயிர்கள் அழிவதுடன் வீடுகளிலும் உப்புமண் அள்ளி வீசப்படுவதால் குறிப்பிட்ட காலங்களில் அப்பகுதி மக்கள் வேறிடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படுவதாக நாம் நேரில் சந்தித்த மக்கள் தெரிவித்தார்கள்.

உப்புமண் அள்ளி வீசப்படும் காலங்களில் கோப்பாய் — கைதடி வீதியால் பயணஞ் செய்பவர்கள் பெரும்பாடுபடுகிறார்கள். இந்த பறாஜ் ஒழுங்காக செயற்பட்டால் இந்தப் பிரச்சினை வராது என்று மக்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இதனைவிட இப்பகுதியில் மழை நீர் தேக்கி வைப்பதற்காக மக்களின் முயற்சியில் பெரும் அணைக்கட்டு அமைக்கப்பட்டிருப்பதையும் நேரிற் பார்த்தோம்.

கல்லுண்டாய்— அராலி வெளியிலும் இத்தகைய ஒரு பறாஜ் இருக்கிறது. இப் பறாஜ் வழுக்கையாறுடன் தொடர்புள்ளதாக இருக்கிறது. தெல்லிப்பழை, அம்பனை, அளவெட்டி, கந்தரோடை, நவாலி, அராலிப் பகுதிகள் ஊடாக வழுக்கையாறு ஓடுகிறது. இந்த ஆறுக்கு இடையில் குளங்கள் இருக்கின்றன. இக்குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். அத்துடன் அராலி பறாஜும் திருத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரை மூன்று பறாஜ்களுமே முக்கியமாக காணப்படுகின்றன. இவை மூன்றும் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டும்.

**பேட்டி: கேசரி**

குளங்களைப் பொறுத்த வரையில் அவை வருடா வருடம் தோண்டப்பட வேண்டும்— முன்னைய காலங்களில் இந்தக் குளங்கள் தோண்டப்பட்டு அவற்றுக்குள் இருந்த பொருக்குகள் அள்ளப்பட்டு, அவை விவசாய நிலங்களுக்குப் போடப்பட்டு வந்தன.

தற்பொழுது விவசாயிகள் தமது விவசாயத் தேவைகளுக்கு இரசாயனப் பொருள்களைப் பாவிப்பதால்எவரும் குளங்களில்இருந்துபொருக்குகளை எடுப்பதில்லை. பொருக்குகளை விவசாய நிலங்களுக்குப் போடுவதால் மண் பதப்படுத்தப்படுவதுடன் குளங்களும் துப்புரவு செய்யப்படுகின்றன. இதனால் மழை காலங்களில் கிடைக்கும் நீரை இந்தக் குளங்களில் தேக்கிவைக்க முடிகிறது. இந்த விடயத்தில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

இதே போன்றுதான் இங்குள்ள வாய்க்கால்கள், துரவுகள் போன்றவையும் திருத்தப்பட வேண்டும். விவசாயிகளின் உதவியுடன் சில இடங்களில் கெயர், உலக உணவு விவசாய நிறுவனம் ஆகியன இந்தத் திருத்த வேலைகளில் ஈடுபடுவதையும் பார்த்தோம்.

கே: யாழ்ப்பாணத்து நீர்வளம் தொடர்பாக நீங்கள் இப்போது நடத்திய ஆய்வுகள் தொடர்பாக ஏதாவது கூறமுடியுமா?

ப: நீர்வளச் சபையினால் 1972 ஆம் ஆண்டு ஓர்

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

**ஆடி -05**

செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி முன்னிரவு: 10.07வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்.

பிற்பகல்: 3.12 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 10.31 - 12.01

ராகுகாலம்: 03.01 - 04.31

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

விருந்தாளி திருப்தியடையாமல் ஒரு வீட்டிலிருந்து சென்றால்; தன் பாவங்களை அங்கு விட்டுவிட்டு அங்கிருப்பவர்களின் புண்ணியத்தை எடுத்துச் செல்கின்றான்.

= இதோபதேசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

## தாவரவியல் துறை தலைவர் நியமனம்

வடமராட்சி, ஜூலை 20

யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறையின் தலைவராகவும், சிரேஷ்ட விரிவுரையாளராகவும் செல்வி நிர்மலா செல்வரட்ணம் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் முன்னர் தாவரவியல்உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தாவரவியல் பட்டப்படிப்பை முடித்த இவர் 1993இல் பட்டப்பின்படிப்பிற்காக பேராதனை விவசாயப்பட்டப் பின் படிப்பு நிலையத்தில் இணைந்து (உணவு விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்) எனும் பிரிவில் மேற்படிப்பை மேற்கொண்டு 1997 இல் முதுமானிப்பட்டம் பெற்றார். கரவெட்டி முடக்காட்டைச் சேர்ந்த இவர் கொழும்பு சென். கிளேயர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றின்பழைய மாணவியுமாவார்.

(ஐ–173)

## கப்பலில் காஸ் சிலிண்டர்

வடமராட்சி, ஜூலை 20

ஒரு தொகுதி சிமெந்து, வாகனங்கள், காஸ்சிலிண்டர்கள் உட்பட பல்வேறு அத்தியாவசியப் பொருள்களுடன் 'வாதுவ' கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

இக்கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும்பணி நடைபெற்று வருகிறது.

(ஐ–173)

## வெள்ளைப்பூடு விலை வீழ்ச்சி

அரியாலை, ஜூலை 20,

யாழ். நகரில் வெள்ளைப்பூடு, உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகள் குறைந்துள்ளன.

தனியார் வர்த்தகர்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் இவற்றைத் தருவித்ததையடுத்துஅவற்றின் விலை குறைந்துள்ளது. (ஐ–17)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி, ஜூலை 20

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிர மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்வி விமலாதேவி வியாகேசுவின் இன்னிசைக்கச்சேரி இடம் பெறும்.

இந் நிகழ்வுக்கான அறிமுகவுரையை இசைமணி இ. துரைராஜா நிகழ்த்துவார்.

(ஐ–173–30)

## நடமாடும் வங்கிச் சேவை

நீர்வேலி, ஜூலை 20

மக்கள் வங்கியின் நடமாடும் சேவை யாழ். மாவட்டத்திலேயே முதன் முதலாக அண்மையில் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் க. ஆனந்தராசாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ஐ–8–110)

## மாவிட்டபுரத்தில் பக்தர்கள்

சுன்னாகம், ஜூலை 20

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டிய விசேட பூசைகள் ஆரம்பித்திருப்பதை அடுத்து, ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தெல்லிப்பழையில் இராணுவ சோதனையின் பின்னர், பக்தர்கள் ஆலயத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

[ஐ–27]

## சந்நிதியான் உற்சவகால ஏற்பாடுகள்

வடமராட்சி, ஜூலை 20

பிரசித்திபெற்ற தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி, உற்சவ நாள்களில் பகல் வேளையில் விசேட சொற்பொழிவு, இன்னிசைக்கச்சேரி போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

ஆலய முன்றலில் நடத்தப்படவுள்ள இந் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் உற்சவ தினங்களில் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை அன்னதானம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இக் கோயில் வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 16 தினங்கள் உற்சவம் நடைபெறும். (ஐ–173)

## ஆடி அமாவாசை விசேட வழிபாடு

வடமராட்சி, ஜூலை 20

பிதிர்தர்ப்பணத்துக்குரிய நாளான ஆடி அமாவாசை தினம் எதிர்வரும் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

குடாநாட்டிலுள்ள இந்து ஆலயங்கள் பலவற்றில் ஆடி அமாவாசையை ஒட்டி விசேட பூசைகள், பிரார்த்தனைகள் என்பன இடம்பெறவுள்ளன. (ஐ–173–30)

## கால் நடைகள் தொல்லை

நெல்லியடி, ஜூலை 20

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் கீழ் இயங்கி வரும் துன்னாலை கோயில் சந்தையில், வேலிகள் எதுவுமின்றிக் காணப்படுவதனால் அங்கு உட்புகும் கால் நடைகள் வியாபாரிகளின் மரக்கறி வகைகளைத் தின்றுநாசமாக்குகின்றன.

(ஐ–8–109)

## விருது வழங்கப்பட்டது

நெல்லியடி, ஜூலை, 20

உடுப்பிட்டி இமையாணன் கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி நாளன்று சமயக் கிரியைகளை மேற்கொண்ட, வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகருக்கு ''பிரதிஷ்டா சிரோன்மணி'' என்னும் விருது வழங்கப்பட்டுள்ளது.

(ஐ – 8 –190)

# ஐ. நா. தூதரகம் மேற்கொள்ளும் 47 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 2 கோடி 10 லட்சம் ரூபா நிதி!

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மாவட்டத்தில் இவ்வருடத்தில் அடுத்த அரையாண்டு காலப்பகுதியில்அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் 47 அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டங்களுக்கு இரண்டு கோடியே 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீதிகள் திருத்தம், பொதுக் கட்டடங்கள் அமைத்தல், சந்தைகள் திருத்தம், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், தச்சு, மேசன் வேலையாளர்கள் கடனுதவி, பாடசாலை கட்டடங்கள் புனரமைப்பு, நூலகங்கள்திருத்துதல், கிணறுகள் புனரமைப்பு போன்ற திட்டங்கள் தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பகுதி, வடமராட்சி போன்ற பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

(ஐ–5–6)

## 'கவசங்கள் நான்கு' நூற் பிரதி

யாழ்ப்பாணம், ஜூலை 20

''கவசங்கள் நான்கு'' என்ற நூலின் முதற்பிரதியை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ த. இராஜேஸ்வரக் குருக்கள் சரசாலை இந்து மன்றச் செயலாளர் க. சிவசங்கரநாதனிடம் சம்பிரதாய பூர்வமான முறையில் பெற்றுக் கொண்டுள்ளார்,

இந்நூலில் விநாயகர் கவசம், சக்தி கவசம், கிருஷ்ண கவசம், கந்தசஷ்டி கவசம் என்பன அடங்கியுள்ளன.

(ஐ-8)

## கால்நடைப் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, ஜூலை 20

சாவகச்சேரி கால்நடைத் திணைக்களமும் கெயர் நிறுவனமும் இணைந்து பளைப் பிரதேச கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்பினை எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடத்தவுள்ளன.

பளைப் பிரதேசத்தில் உள்ள கால்நடைகள் வளர்ப்போர் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

(ஐ–117)

## இளம் பெண் கிணற்றுக்கு பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 20

அதிகாலை முகம் கழுவுவதற்காக தண்ணீர் அள்ளிய வேளை கிணற்றில் தவறி விழுந்து மரணமானதாக இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை கிழக்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தையா மகேஸ்வரி (வயது–25) என்பவரே உயிரிழந்தவராவார்.

நடைபெற்ற மரண விசாரணையை அடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ–15)

## மட்டக்களப்பு மேயரின் நூல் வெளியீடு

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் ஜே. பேரின்பநாயகம் எழுதிய ''சிறிவந்த சூறாவளி – 78'' என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று மட்டக்களப்பு புதிய செயலகக் கட்டடம் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்தது.

1978ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் வீசிய சூறாவளி தொடர்பான விடயங்களை இதில் அவர் எழுதியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட [illegible] பேரவை இந்நூலை வெளியிட்டுள்ளது.

(இ–21)

## வீதியில் நின்ற பெண்ணின் சங்கிலியை அறுத்து 'டிறக்'கினுள் வீசினார்! மனநோயாளி கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூலை 20

பஸ்ஸை எதிர்பார்த்து வீதியோரம் காத்து நின்ற பெண் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை திடீரென அறுத்தெடுத்த மற்றொரு பெண் அதனை அவ் வீதிவழியாக வந்துகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்றினுள் வீசி எறிந்தார்.

இச்சம்பவம் கைதடிப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்றது.

கைதடியில் உள்ள சைவச் சிறுவர் விடுதியில் நடந்த சமய நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருந்த மீசாலையைச் சேர்ந்த பெண் ஒருவரின் சங்கிலியே இவ்வாறு அறுக்கப்பட்டது.

சங்கிலியை அறுத்தெடுத்து இராணுவ வாகனத்துக்குள் வீசியவர் ஒரு மனநோயாளி என்பது பின்னர் தெரியவந்தது.

படையினர் உடனடியாக வாகனத்தை நிறுத்தி அதற்குள் வீசப்பட்ட சங்கிலியை எடுத்து உரிய பெண்ணிடம் கொடுத்தனர்.

அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் பிரஸ்தாப பெண் ஒரு மனநோயாளி என்பதை உறுதிப்படுத்தினர்.

மனநோயாளர்கள் சம்பந்தப்பட்ட இதுபோன்ற சம்பவங்கள் அண்மைக் காலமாக குடாநாட்டில் அதிகரித்து வருகின்றன.

(ஐ-135)

## நயினை ஆஸ்பத்திரிக்கு 10லட்சம் ரூபா நிதி

திருநெல்வேலி ஜூலை 20

நயினாதீவு அரசினர் வைத்தியசாலையில் திருத்த வேலைகளை மேற்கொள்ளுவதற்கும், தண்ணீர் விநியோகம், வடிகால் அமைப்பு ஆகியவற்றின் பராமரிப்பு வேலைகளுக்கும் வடக்கு–கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் இவ்வருடம் நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் பத்து இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதேவேளை —

காரைநகர் அரசினர் வைத்தியசாலையின் புனரமைப்பு வேலைகளுக்காக ஆறு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## பண்டத்தரிப்பு: தற்காலிக கொட்டகையில் சந்தையை இயக்க முயற்சி

சண்டிலிப்பாய், ஜூலை 20

பண்டத்தரிப்பு சந்தையைத் தற்காலிகமாக இயங்கச் செய்வதற்காக அங்கு ஒரு தற்காலிக கொட்டகையை அமைப்பதற்கு பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சேதமடைந்துள்ள இச்சந்தைக் கட்டடத்தை புனரமைப்புச் செய்வதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட பிரிவு முன் வந்துள்ள போதிலும் இதற்கான வேலைகளை ஆரம்பித்து பூர்த்தி செய்வதற்கு மேலும் பல மாத காலம் செல்லும். சந்தை வசதி இல்லாமையால் வியாபாரிகளும், பாவனையாளர்களும் மிகுந்த கஷ்டமடைந்து வருகின்றார்கள். ஆகவே தற்காலிக ஏற்பாடாக சந்தையின் ஒரு பகுதியில் கிடுகினால் வேயப்பட்ட தற்காலிக கொட்டகை ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு சங்கம் முன் வந்துள்ளது.

இம் மாத முடிவுக்குள் இக் கொட்டகை நிறுவப்படும் என்று பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ஏ. வி. துரையப்பா தெரிவித்தார்.

(ஐ-135)

## பாக். தூதுவர் இலங்கை வருகை

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் விசேட தூதுவரான அக்ரம் ஷாகி நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தார்.

எதிர்வரும் 29–ம் திகதி முதல்கொழும்பில்நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக இடம் பெறவுள்ள வெளிவிவகார அதிகாரிகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே இவர் கொழும்பு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக் கருத்தரங்கு

பாடசாலை மட்டங்களில் சமூக ஒருமைப்பாட்டுக்கான கல்விக் கருத்தரங்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது.

நகரப் பகுதியில் 4 பாடசாலைகளில் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கு யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் மகளிர் நிலையத்தினால் நடத்தப்படவுள்ளது.

மாணவர்கள் மட்டத்திலும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து அதற்கு தீர்வு காணக்கூடிய வழிகளை கலந்துரையாடல்கள் மூலம் ஏற்படுத்துவதே இந்தக் கருத்தரங்கின் நோக்கம் என்று மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார்.

# களுத்துறைக் கைதிகளை பூஸாவுக்கு மாற்ற முடிவு

கொழும்பு, ஜூலை 20

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகள் அனைவரும் பூஸா இறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று களுத்துறைச் சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பூஸா சிறைச்சாலையைத் திருத்தியமைக்கும் பணிகள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. அவை முற்றுப் பெறும் பட்சத்தில் இங்குள்ள தமிழ்க் கைதிகள் அனைவரும் அங்கு மாற்றப்படுவர். அத்துடன் தமிழ்க் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இடப் பிரச்சினையும் நிலவுகின்றது.

மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் மாற்றப்படும் போது கொண்டு செல்வதில் கூட பல சிக்கல்கள் உள்ளன. இவற்றிற்கு முற்றுப் புள்ளி வைக்கும் பொருட்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தமுடிவானது நாடாளுமன்ற உறுப்பினரொருவர் தாக்கப்பட்ட பின்பு எடுத்த முடிவு அல்ல. ஏற்கனவே இது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டிருந்தது— என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## குருளைச் சாரணர் விழா

தென்மராட்சி, ஜூலை 20

சாவகச்சேரி, கிளிநொச்சி மாவட்ட குருளைச் சாரணர் விழா கடந்த சனியன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது.

இவ் வைபவத்தில் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் மா. புவனேந்திரன், கிளிநொச்சி மாவட்ட உதவிச் சாரண ஆணையாளர் ஆ. பொ. செல்லையா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி, பளைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த சாரணர்களின் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

(ஐ-117)

## மீண்டும் ஆஸ்பத்திரியில்

'மில்க் வைற்' அதிபர் சிவதர்மவள்ளல் க. கனகராசா கடும் சுகயீனமுற்று யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொழும்பில் சிகிச்சை பெற்று யாழ். திரும்பிய மூன்று தினங்களில் மீண்டும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

### சித்திர, நடன, சங்கீத

# டிப்ளோமா ஆசிரியர் நேர்முகப்பரீட்சை ரத்து!

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சித்திர, நடன, சங்கீத டிப்ளோமா ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் அடுத்த வாரம் முதல் நடத்தப்படவிருந்த நேர்முகப் பரீட்சை உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா இதனை அறிவித்துள்ளார்.

மேற்படி டிப்ளோமாதாரிகளை ஆசிரியர்களாகத் தெரிவு செய்யும் அதிகாரம் மாகாண நிர்வாகத்திற்கு இல்லையென்பதால் மேற்படி நேர்முகப் பரீட்சைகள் ரத்துச் செய்யப்படுவதாக டிவகலாலா மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-6-10)

## கதிர்காமம் கொடியேற்றம்

கொழும்பு, ஜூலை 20

கதிர்காமம் வருடாந்த உற்சவம் எதிர்வரும் வியாழனன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இலங்கையிலுள்ள முக்கிய முருகன் தலங்களில் கதிர்காமமுமொன்று. நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் அடியார்கள் இங்கு வருகை தந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொள்வர். (ஐ)

## நீரை மட்டும்...

(ஏழாம்பக்கத் தொடர்)

ஆராய்ச்சி நடத்தப்பட்டதாக அறிந்தோம். இந்த ஆராய்ச்சியின் போது இணற்று நீர்மட்டம் கடல் மட்டத்திற்குக் கீழே வந்து கொண்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பப்பட்டது.

1985 இல் வெளிநாட்டு நிபுணர் ஒருவர் நடத்திய ஆய்வின் பின் இரண்டாயிரம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்து நன்னீர்க் கிணறுகள் உப்பு நீராக மாறும் நிலையேற்படும் என்று எச்சரித்திருந்தார். இந்த நிலை குடாநாட்டின் பல இடங்களில் இப்போது ஏற்பட்டு வருவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இந்த ஆபத்திலிருந்து தப்புவதற்கு தண்ணீர் பாவிப்பதில் கட்டுப்பாடும், மழை நீரைத் தேக்குவதும் அவசியம்.

கே: நீங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள தொண்டமானாறு, பறாஜ், உப்பாறு பறாஜ், அராலி பறாஜ் போனறவற்றைப் பார்வையிட்டுள்ளதுடன் குளங்கள், அணைக்கட்டுகள் போன்றவற்றையும் பார்வையிட்டுள்ளீர்கள். இவற்றின் புனரமைப்புக் குறித்துக் கூற முடியுமா?

ப: நாங்கள் பார்வையிட்டபின் சில திட்டங்கள் உடனடியாகச்செய்யப்பட வேண்டியுள்ளன என முன்னுரிமைப்படுத்தியுள்ளோம். அவற்றில் பறாஜ்களின் புனரமைப்பு முக்கியம் எனக் கருதுகிறோம். கடந்த 10 - 15 வருடங்களாக இவை பயன்படுத்தப்படாத நிலையிலிருப்பதால் பல பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

குளங்களும் வருடா வருடந் தோண்டி ஆழமாக்கப்படுவது முக்கியமானது என்பதனையும் உணரக் கூடியதாகவுள்ளது.

### பெருமளவு நிதி தேவையில்லை

கே: இத்திட்டங்களை புனரமைப்புச் செய்வதற்கு நீங்கள் கணித்துள்ள உத்தேச மதிப்பீடு?

ப: இதற்கு பெருமளவு நிதி தேவைப்படாது என்றுதான் நாம் கருதுகின்றோம். குளங்கள், துரவுகள், அணைக்கட்டுக்கள் போன்றவற்றை அப்பகுதி மக்களின் உதவியோடு புனரமைப்புச்செய்ய முடியும். சில நிறுவனங்கள் அவற்றைச் செய்து வருகின்றன. இந்தப் புனரமைப்பை ஒவ்வொருவருடமும் திட்டமிடப்பட்ட முறையில்செய்து வரவேண்டும்.

பறாஜ்கள் திருத்தம் செய்வதற்குத் தான் சற்று அதிவு பணம் செலவு செய்யப்பட வேண்டும். இதற்கு பொறியியலாளர்களின் சேவையும் பெறப்பட வேண்டும்.

கே: நோர்வே தூதுவராலயம்தான் உங்களை இங்கே அனுப்பி வைத்துள்ளது. இத்திட்டங்களுக்கு நோர்வே அரசு உதவுமா?

ப: சிறிலங்கா அரசு இத்திட்டம் தொடர்பாக நோர்வே அரசினை உதவுமாறு கேட்டிருந்தது. எனவே இது குறித்து ஸ்தலத்திற்கு சென்று சாத்தியக் கூற்று அறிக்கையொன்றைத் தயாரித்துத் தருமாறு நோர்வே அரசு கேட்டுக் கொண்டதன் பேரிலேயே நாம் இங்கு வந்துபார்த்தோம். அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கவுள்ளோம். இதன்பின் இத்திட்டங்கள் பற்றி நோர்வே அரசு தான் முடிவு செய்யும்.

கே: உள்ளூரில் உள்ளநிறுவனங்கள்மூலம்இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாதா?

ப: உள்ளூரில் நிர்வாகசபை போன்ற அரச நிறுவனம் உட்பட பல நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றைப் பொறுத்தவரை ஆளணி இல்லாமை, நிதிவளம் இல்லாமை, திட்டங்களை நிறைவேற்றுவதற்கான இயந்திர சாதன வசதி இல்லாமை போன்றவை பெரும் குறைபாடுகளாக இருக்கின்றன.

இத்திட்டத்தை எவர் செய்ய முன் வந்தாலும் இந் நிறுவனங்களின் உதவியுடன் தான் செய்ய வேண்டும் என்பது முக்கியம்.

கே: உள்ளூரில் இத்திட்டங்கள் தொடர்பாக நீங்கள் யார் யாரைச் சந்தித்தீர்கள்?

ப: அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், இங்குள்ள நீரியல் நிபுணர்கள், ஆலோசகர்கள், பொறியியலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் போன்றவர்களைச் சந்தித்தும், திட்டங்களை நேரிற் பார்வையிட்டும் முழுமையான விவரங்களைப் பெற்றுள்ளோம்.

கே: இத்திட்டங்கள் தொடர்பான பூரண விவரங்களைப் பெறுவதற்காக ஒரு வார காலம் இங்கு தங்கியிருந்து பலரையும் சந்தித்ததுடன், பல இடங்களுக்கும் நேரில் சென்று உண்மை நிலைகளையும் அறிந்துள்ளீர்கள். உங்களைப் போன்று பலர் இங்கு வந்து சென்று திரும்பியிருக்கிறார்கள். ஆனால் எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எனவே உங்கள் திட்டமும் பார்வையிடப்பட்டதுடன் நின்று விடுமா? அல்லது தொடர்ந்து நடைபெறுமா என்பதைத் தெரிவிக்க முடியுமா?

ப: யாழ்ப்பாணத்தில் பல நிறுவனங்கள் அலுவலகங்களைத் திறந்து பல பணிகளைச் செய்து கொண்டு வருகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே நோர்வே அரசைப் பொறுத்தவரை ஏற்கனவே செய்யப்பட்ட திட்டங்களோடு சம்பந்தப்படாமல் புதிய திட்டங்களை யாழ்ப்பாணத்தில்செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டத்தை அடையாளங் கண்டு எம்மை அந்நாட்டு அரசு இங்கு அனுப்பி வைத்தது. எனவே இத்திட்டத்தை அவர்கள் நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

★

## கூடைப் பந்தாட்டம்

'உதயன்' நிறுவனம் மற்றும் யாழ். றோட்டரிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல் கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கள் மாலை பல் கலைக்கழக கூடைப்பந்தாட்டத்திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ மாலை 4 மணி — யுத்கார்மல் வி. க எதிர்சிக்கோ அன்ட் டிஸ்கோ வி. க (பெண்கள்)

★ மாலை 5 மணி — பற்றீசியன் வி. க எதிர் பல் கலைக்கழக புளூஸ் அணி (ஆண்கள்) (ஐ-ரீ)

# காணாமற்போனோர் குறித்து விசாரிக்க குழு நியமிக்குக!

### குடியுரிமை அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

''வடக்கில் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள குழு ஒன்றை நியமிக்க வேண்டும்''.

இப்படிகுடியுரிமைஅமைப்பு (சி. ஆர். எம்.) ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

அந்த அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இப்படிக் கோரியுள்ளது.

யாழ். மாவட்டம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பாக சுயேச்சையான குழு ஒன்றை அமைக்க தாங்கள் ஏற்கனவே வாக்குறுதி அளித்திருந்தீர்கள்.

ஆறு மாத காலத்துக்குள் இந்தக் குழு அமைக்கப்படும் எனத் தாங்கள் தெரிவித்திருந்த போதும் இன்னும் குழு அமைக்கப்படவில்லைஆகவே உடன் இக்குழுவை அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும்—

இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குவைத்தில் இலங்கையருக்கு தூக்கு!

கொழும்பு, ஜூலை 20

குவைத் நகரில் மற்றுமொரு இலங்கையர் தூக்கிலிடப்பட்டார்.

இலங்கையைச் சேர்ந்த ஜசீர் அப்துள் கபூர் என்பவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தியாவைச் சேர்ந்த தமது காதலியை கொலை செய்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இதேவேளை போதைப் பொருள் கடத்திய குற்றத்தின் பேரில் இரண்டு ஈரானியர்கள் நேற்றுத் தூக்கிலிடப்பட்டார்கள். போதைப் பொருள் குற்றத்துக்காக குவைத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை ஆகும்.

(இ-9)

## விவசாய ஆலோசனை கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு ஜூலை20

யாழ் குடாநாட்டில் போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட விவசாயத் திட்டங்களை மீளவும் நல்ல முறைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பண்ணைக் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அரசசார்பற்ற நிறுவனமான பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி திருமதி பிராங்கோயிஸ் ஜேக்கப் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆராய உள்ளார்.

யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன், திட்டமிடல்பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன், விவசாய விரிவாக்க உதவிப்பணிப்பாளர் ரி. சிவலோகநாதன், விவசாயப் பயிற்சி உதவிப் பணிப்பாளர் எஸ். சிவனேத்துரை உட்பட பலர் இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

(ஐ-152)

### கொழும்பு செல்வதற்கான

# விண்ணப்பப் படிவங்கள் நெடுந்தீவிலும் பெறலாம்

நெடுந்தீவு, ஜூலை 20

கொழும்புக்குச் செல்வதற்கான அனுமதி கோரும் விண்ணப்பப்படிவங்களை நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் நெடுந்தீவிலேயே பெற்றுக் கொள்ளக் கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நெடுந்தீவில் உள்ள ஒருவர் கொழும்புக்குச் செல்வதானால் வேலணையில் உள்ள படையினரின் சிவில் நிர்வாகப் பிரிவுக்கு வந்தே அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுச் செல்ல வேண்டி இருந்தது.

இதனைக் கருத்திற் கொண்டு கடற்படை அதிகாரியிடம் சம்பந்தப்பட்ட விடயங் குறித்துத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் நெடுந்தீவில் உள்ள கடற்படைக்குக் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்களை அனுப்பி வைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

(ஐ-111)

## புதிய இணைப்பதிகாரி

கொழும்பு, ஜூலை 20

மட்டக்களப்புக்கு புதிய பாதுகாப்பு இணைப்பு அதிகாரியாக கேணல் ஜயதிலக நாளை செவ்வாய்க்கிழமை பதவி ஏற்கவுள்ளார்.

தற்போது பாதுகாப்பு இணைப்பதிகாரியாகக் கடமையாற்றும் ஏ. ஆர். எம். ஹக்கி நாளை முதல் இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவைக்கு தம்மை அர்ப்பணித்தவர் சிவா

## யாழ். மேயர் வாழ்த்து

கொழும்பு, ஜூலை 20

"தந்தை செல்வாவுக்குப் பின்னர் ஈழத்தமிழினத்தின் முதுபெரும் தலைவனாக எம் மத்தியில் வாழ்ந்து கொண்டு தமிழினத்தின் இன்னல்களுக்காகவும், விடிவுக்காகவும் பாடுபட்டு வரும் மூதறிஞர் சிவசிதம்பரம் இன்று பவள அகவையைக் கொண்டாடுகிறார். தனது வாழ்க்கையில் பெரும்பகுதியை மக்கள் சேவையில் ஈடுபடுத்தி தன்னை வருத்தி வாழ்ந்து வருபவர் சிவசிதம்பரம்"

யாழ். மாநகர மேயர் பொ. சிவபாலன் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று 75 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் எம். சிவசிதம்பரத்தை வாழ்த்தி அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மிகத் திறமை மிக்க சட்டவாதியும் நேர்மைமிகு அரசியல்வாதியுமான சிவசிதம்பரம் பதினாறு வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக தமிழினத்துக்கு சேவை செய்தவர். தந்தை செல்வா நூற்றாண்டு விழாத் தேசிய அவையின் தலைவராக உள்ள இவர் இந்த நூற்றாண்டு காலத்திலேயே தனது எழுபத்தைந்தாம் ஆண்டு நிறைவைக் காண்பது தனிச்சிறப்பாகும்.

தியாகமும் ஒழுக்கமும் மிக்க பெரியவர்களை நாம் பேணுதல் எமது தலையாய கடமை ஆகும். எமது யாழ்ப்பாண மக்கள் சார்பிலும், மாநகர் சார்பிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பிலும். அமிர்தலிங்கம் நினைவுப்பணிக் கழகம் சார்பிலும் மேலும் பல்லாண்டுகாலம் வாழ்ந்து எமக்கும் எமது இனத்துக்கும் கௌரவம் சேர்க்க இறைவனையும் தமிழ்த்தாயையும் வேண்டுகின்றோம்.

தந்தை மூதறிஞர் செல்வநாயகம் அவர்களின் பின் எமது இனத்தில் பெரியாராக வாழும் இறைபக்தியும் ஒழுக்க சீலமும் மிக்க இவரை நமது இனம் இனிவருங்காலத்தில் மூதறிஞர் மு. சிவசிதம்பரம் என அழைத்துப் போற்றுதல் சாலவும் சிறப்புடையதாகும் என்றுள்ளது.

(இ-3)

# அமைச்சர் வவுனியா வந்துபோனதை பொலீஸார் அறிந்திருக்கவில்லை

## நகரின் பாதுகாப்பு நிலைகுறித்து பிரஸ்தாபம்

கொழும்பு, ஜூலை 20

"நான் எனது மெய்ப்பாது காவலர்களுடன் வவுனியா சென்று மீண்டும் கொழும்புக்குத் திரும்பியுள்ள போதிலும் நான் வவுனியா சென்று வந்ததைப் பொலீஸாரோ அல்லது புலனாய்வுத்துறையினரோ அறிந்திருக்கவில்லை. இதன் மூலம் வவுனியாவில் பாதுகாப்புச் சீர்கேடாக உள்ளதாகவே தெரிகிறது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக வவுனியா சென்றிருந்த திட்டமிடல் அமுலாக்கல் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நான் வவுனியா சென்ற சமயம் எனக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை; நான் சென்ற விவரங்கள் புலனாய்வுப் பிரிவினருக்குத் தெரியவுமில்லை."

நாட்டின் பிரதான கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த வவுனியாவிலேயே இவ்வாறு பாதுகாப்பு நிலை காணப்படுவது சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வன்னிப் பகுதி அரச அதிபர்கள் ஒபடகேயை கொழும்பில் சந்திப்பர்

## நிவாரண வெட்டுக் குறித்துபேச்சு நடத்துவர்

கொழும்பு, ஜூலை 20

அரசு அறிவித்துள்ள நிவாரண வெட்டினால் இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் அனுபவித்து வருகின்ற இன்னல்கள் தொடர்பாகவும்—

வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் —

வன்னிப்பகுதி அரச அதிபர்கள் நால்வர் வடமாகாண மீள்குடியமர்த்தல் மற்றும் புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் என். ஏ. ஒபடகே மற்றும் பாதுகாப்பு உயரதிகாரிகளை இன்று சந்திக்க உள்ளனர்.

வவுனியா அரச அதிபர் எஸ். கணேஷ், கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம், மன்னார் அரச அதிபர் குறூஸ், முல்லைத்தீவு அரச அதிபர் தர்மகுலசிங்கம் ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

வன்னிப் பகுதியில் அதிகளவு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர். இவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் நிறுத்தப்படுமானால் இவர்கள் பட்டினி கிடக்கவேண்டிய நிலை ஏற்படக்கூடும் எனவும்—

மன்னாரில் தற்சமயம் தங்கியுள்ள சுமார் மூவாயிரம் பயணிகளை வட பகுதிக்கு அனுப்புவது மிகவும் அவசியம் எனவும் — இவர்கள் தெரிவிக்க உள்ளனர்.

அதே சமயம் நிவாரண வெட்டுக் குறித்து யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதனும் கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார்.

# ஊரடங்கு நேரம் பிரசவித்த இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

ஊரடங்கு நேரம் வீட்டில் குழந்தை பிரசவித்த இளம் பெண் ஒருவர் மரணமானார்.

ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

சிவசுதன் மேரி அன்டொறின் (வயது 18) என்பவரே மரணம் அடைந்தவர் ஆவார்.

பிரஸ்தாபப் பெண்ணுக்கு இரவு ஒன்பது மணிக்கு பிரசவ வேதனை கண்டதாகவும்—

ஆஸ்பத்திரிக்குப் புறப்பட ஆயத்தமானவேளை வாகன வசதியின்றித் தாமதம் ஏற்பட்டதாகவும்—

10.30 மணிக்கு குழந்தை வீட்டிலேயே பிரசவமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இரண்டரை மணி நேரமாக நஞ்சுக்கொடி வெளியேறாத நிலையில் அப்பெண் மயக்கநிலையை அடைந்தார் என்றும்—

ஊரடங்கு நேரம் பெரும் சிரமத்துக்கு மத்தியில் புறப்பட்டு வாகனமொன்றை ஏற்பாடு செய்து அதிகாலை 1-30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரிக்கு அப்பெண்ணை எடுத்துச் சென்று அனுமதித்ததாகவும்—

அங்கே அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தி ஒரு மணி நேரத்தில் அந்தப் பெண் மரணமடைந்ததாகவும் கூறப்பட்டது.

சடலம் மரணவிசாரணையின் பின் கணவனிடம் கையளிக்கப்பட்டது.

(இ-15)

# ரெலோவின் தமிழ் தேசிய வீரர் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வெலிக்கடைப் படுகொலையை நினைவுகூரும் முகமாக எதிர்வரும் 25 ஆம் திகதி ரெலோ அமைப்பு தமிழ் தேசிய வீரர் தினத்தைக் கொண்டாடவுள்ளது.

அன்றைய தினம் யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும் சிரமதானப் பணிகளும், கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று ரெலோ முதல்வர் என். சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

(இ-3)

# வாஜ்பாய் -- சந்திரிகா யுத்தம் குறித்து பேசுவர்

கொழும்பு, ஜூலை 20

கொழும்பில் நடைபெற உள்ள சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வரவுள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாயை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சந்தித்து வடக்கு — கிழக்குப் பிரச்சினை தொடர்பாகவும், தமிழ் நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்பாகவும் பேச்சு நடத்த உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் சந்திரிகா இருதரப்பு உறவுகள் குறித்தும் விரிவாகப் பேச்சு நடத்துவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு—கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாகவும் அரசியல் தீர்வு தொடர்பாகவும் இவர்களது பேச்சின் போது அதிக கவனம் செலுத்தப்படும் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-9-10)

# வீரப்பனின் சகா பலி!

சென்னை, ஜூலை 20

தமிழ்நாட்டில் சந்தன மரக் கடத்தல் காரர் வீரப்பனின் நெருங்கிய சகா ஒருவர் சிறப்பு அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதல் பன்னாரி காட்டுப் பகுதியில் இடம்பெற்றது. வீரப்பன் குழுவைத் தேடிக் கொண்டிருந்த சிறப்புக் காவற் படையின் பிடியில் வீரப்பனின் சகா தற்செயலாகச் சிக்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-6)

# புளொட் எம். பி. கொலை இந்து பேரவை அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து வட பிராந்திய இந்துப் பேரவை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன் அவர்களது மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையடைகிறோம். இச் சந்தர்ப்பத்தில் அன்னார் இப்பகுதியில் ஆற்றிய இந்து சமயப் பணிகளை நினைவு கூருகின்றோம்.

முடிவில்லாத யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் உயிரிழப்புக்களும், அழிவுகளும் நலிவுகளும் தொடர் கதையாகிவிட்டன.

இத்தருணத்தில் நாட்டில் யுத்தம் நின்று அமைதி சமாதானம் சமத்துவமான அரசியல் தீர்வு என்பவை ஏற்படவும் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும், பிரார்த்தித்து அன்னாரது குடும்பத்துக்கும் ஆறுதல் கூறுகின்றோம் — என்றுள்ளது.

(இ-3)

# விவசாயிகள் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு ஜூலை 20

அம்பாறை மாவட்டம் மகாஓயா வீதியில் நுகரகந்தையில் இரு விவசாயிகள் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வயல் வேலைகள் முடித்து வீடுதிரும்பும் போது இச்சம்பவம் இடம்பெற்றது.

மற்றுமோர் விவசாயிகாயமடைந்துள்ளார்.

(இ-21)

## தொலைத் தொடர்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

அங்கு காணப்பட்ட குண்டு ஒன்றைக் கண்டெடுத்து அதைப் பரிசீலனை செய்த போது அது வெடித்தது.

இக்குண்டு வெடிப்பில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் மற்றும் ஒரு பொலீஸ்காரரும் காயமடைந்தனர்.

பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி கொழும்பு கண் ஆஸ்பத்திரியிலும், மற்றவர் தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-3-9-21)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்த அவகாசத்தை வழங்கிவிடும்.

யுத்தத்தில் 90சத வீதமான வெற்றி ஏற்கனவே எட்டப்பட்டுவிட்டது.

சமாதானமும், ஐக்கியமும் கொண்ட இலங்கை ஒன்றைக் கட்டி எழுப்ப மேற் [illegible] களுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்—

இப்படி அவர் கூறினார்.

(இ-3-9)

## சிவாவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் பல அறிஞர்கள் பங்கு பற்றி உரையாற்றுவர்.

அத்துடன் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பிரார்த்தனை நிகழ்வுகளுக்கும் ஏற்பாடாகியுள்ளன.

(இ-3)

## குழந்தைகளை...

(முதலாம் பக்கத் தொடர்)

மண்எண்ணெயை ஊற்றி இவர் தீமூட்டிக்கொண்டார் என்று கூறப்படுகின்றது.

இச் சம்பவத்தில் கனகரட்ணம் புஸ்பரஞ்சிதம் (வயது 36) என்ற பெண்ணும் அவரது மூத்த மகன் க. சரண்யதாஸ் (வயது 6) ஆகிய இருவரும் உயிரிழந்தனர். இரண்டாவது மகனான க. சயந்தன் (வயது 4) தீக்காயங்களுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தீமூட்டியதும் வெளியே கசிந்த புகையைக் கண்ட அயலவர்கள் கதவை உடைத்துத் திறந்தபோது தாயார் உடல் கருகி மரணமடைந்திருந்தார். பிள்ளைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோது மூத்த மகன் அங்கு உயிரிழந்தார்.

(இ-9-15-139-117)

## இரண்டு இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்று கொண்டிருந்த சமயம் பொலீஸார் அவர்களைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான இரு இளைஞர்களில் ஒருவர் 1991 ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் ரி 56 ரகத்துப்பாக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதாகி பிணை அனுமதிக்கப்பட்டவர் என்று விசாரணையில் தெரியவந்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-3-9)

# நுணுக்குக் காட்டி பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் யுனிசெவ் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட மலேரியாநோயைக்கண்டுபிடிக்கும் 10 நுணுக்குக்காட்டிதொழில்நுட்ப வியலாளருக்கான பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் நுணுக்குக் காட்டி தொழில் நுடப வியலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடனே இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நெறிக்கு தேவையான பத்து நுணுக்குக்காட்டி கருவிகளும் யுனிசெவ்வினால் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அறுபது நாள்கள் நடைபெறும் இப்பயிற்சி நெறியை பூர்த்தி செய்த பின் பத்துப் பயிற்சியாளர்களும் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-5-6-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org